1435

# முனைப்பு

6


1991 புரட்டாதி

விலை ரூபா : 10.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்திரு. விபுலானந்த அடிகளின்
நூற்றாண்டு



இதில் வரும் கதைகள், கவிதைகள் யாவும் கற்பனையே.
படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள்.

இச் சஞ்சிகை முனைப்பு சாதனைங்களுடன் சாய்ந்தமருது நேஷனல்,
கல்முனை மணமகள் அச்சகங்களில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.
வெளியிடுபவர் : ஆசிரியர் மருதூர் பாரி 13. 09. 1991

முனைப்பு, பிரதான வீதி, மருதமுனை. கி. மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலானந்த அடிகளாரின் கல்வித் தொண்டு

- புலவர்மணி - ஏ - பெரியதம்பிப்பிள்ளை -

இருபதாம் நூற்றாண்டின் ஈழநாட்டுச் சோதியாகிய விபுலானந்த அடிகளார் ஈழநாட்டிற்கும், செந்தமிழ் நாட்டிற்கும் பொதுவாகவும், தாம் பிறந்த மட்டக்களப்பு மாநாட்டிற்குச் சிறப்பாகவும் ஆற்றியுள்ள கல்வித் தொண்டு பற்றி எழுதுவதென்றால் அது ஒரு கட்டுரையில் அடங்காது. பல நூல்கள் எழுதி விமர்சனம் பண்ணுதற்கு ஏற்றதாக அது விரிவுபெற்றுள்ளது.

1892ம் ஆண்டு பிறந்து, 1911ம் ஆண்டு வரை மாணாக்கராயிருந்து, 1912 தொடக்கம் 1947 முடியவுள்ள காலப்பகுதியில் தமிழ், ஆங்கிலம், வடமொழி முதலிய பன்மொழிப் புலமையால் அறிவொழி பரப்பிய ஈழநாட்டுச் சோதியின் கல்வித் தொண்டு பழைமையிற் புதுமையும், புதுமையிற் பழைமையும் காட்டிய அதியற்புத சாதனையை நிலைநாட்டியுள்ளது.

மயில்வாகனம் என்னும் பிள்ளைப் பெயர் பெற்ற அடிகளார், 1911ம் ஆண்டுக்கும் 1915ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் சாமிதாச மயில்வாகனனார் என அழைக்கப் பெற்றார். 1916ம் ஆண்டு தொடக்கம் 22ம் ஆண்டுவரையுள்ள காலப்பகுதியில் பண்டித மயில்வாகனனாரெனப் பெயர் பெற்று விளங்கினார். 1922ம் ஆண்டு தொடக்கம் 1924ம் ஆண்டு வரையும் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்துப் பிரமசாரியாயிருந்து பிரபோத சைதன்னியர் எனும் புனித நாமத்தால் வழங்கப்பெற்றார் 1925 தொடக்கம் விபுலானந்த அடிகள் என்னும் துறவுப் பெயரால் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்த் தம்மை மக்களுக்காக அர்ப்பணம் செய்து; யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் தியாக சிந்தை பூண்டவராக; 1947ம் ஆண்டுவரை தன்னலம் கருதாத சேவை புரிந்து; இறந்தும் இறவாத வராக உலக மக்களின் உள்ளங்கலந்து வாழ்கின்றார்.

நீடுவாழ் விபுலானந்த அடிகளாரின் கல்வித் தொண்டு 35 ஆண்டுகள் கொண்ட காலப்பகுதிக்கு உட்பட்டதாயினும், அது ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளையும் கடந்து அப்பால் சென்று நிலைநாட்டிய சாதனைகளைக் கொண்டது. மிகுந்த சக்திவாய்ந்த அதனைச் சுருக்கமாக இங்கே எடுத்துக் கூறுதற்கு ஒருவாறு முயல்கிறேன்.

அடிகளார் பயிற்றப்பட்ட ஓர் ஆங்கில ஆசிரியர்; பொறியியற் கலையில் 'டிப்ளோமா' பெற்றவர்; இலண்டன் பல்கலைக் கழகத்து விஞ்ஞானப் பட்டதாரி (B. Sc.); மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதர். இத்தனை வாய்ப்புகளையும் பெற்றிருந்த அடிகளார், அவற்றைத் துணையாகக் கொண்டு இல்லற வாழ்க்கையிற் பிரபல்யம் பெறவிரும்பாது; துறவு நெறியிற் புகுந்தமையால் தேசிய சமுதாயத்தை நமது கல்விமான்கள் உருவாக்கித் தரவேண்டுமென்பதில் மிகவும் ஆர்வங்கொண்டுழைத்தவர் நமது மயில்வாகனனார். அன்றியும் தேசிய தாகத்துடன் கல்விக் கொள்கையிலே புரட்சிகரமான மாற்றம் செய்வதற்காகப் பாடுபட்டவர். உதவாத கல்வியில் நின்று விடுதலை பெற்று உதவுங் கல்வியை நாட்டு இளைஞர்களுக்கு ஊட்டி வைத்தல் என்பது அவரின் புதிய திட்டமாகும். எல்லா அறிவும் மேற்கிலிருந்துதான் இறக்குமதியாகவேண்டும் என்கின்ற கொள்கையை அவர் அடியோடு வெறுத்தார். உதவாத கல்வியை நாம் சந்ததி சந்ததியாகப்பெற்று அன்னியர்க்கு உழைத்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிப் போதும். நமக்கு வேண்டியது கையாலாகுங் கல்வியே. கல்வி, தேடு கல்வியாயமைய வேண்டும். பொருளைத் தேடுங்கல்வி; கடவுளைத் தேடுங்கல்வியென அது அமைய வேண்டுமென அவர் கொண்டிருந்த எண்ணம் இன்று செயல் முறைக்கு வந்திருப்பதைக் கண்டு மகிழ்வு கொள்வதற்கு அவர் இங்கில்லை. எனினும் ஆவி வடிவிலேனும் நிச்சயமாக அவர் இதைக் கண்டு மனநிறைவு கொள்ளாமலிரார்.

1922ம் ஆண்டுவரை பண்டித மயில்வாகனனார் என வழங்கி வந்த நிலை மாறி; உலகியல் நெறிவழியே நின்று நேர்மையாகவும், கூர்மையாகவும், சீர்மையாகவும் கலைத் தொண்டு செய்து வந்த நிலை மாறி; துறவு நெறி பூண்டு 1925ம் ஆண்டு தொடக்கம் அருள் நெறியை நோக்கி விபுலானந்தரின் கல்வித் தொண்டு விரிவடையலாயிற்று. அவரது கல்வி, செல்வம், அறிவு, ஆற்றல் எல்லாம் உலகுக்கு உரிமையாகிவிட்டன.

1922 தொடக்கம் 25 வரையுள்ள காலப் பகுதியில் அடிகளாரின் அறிவாற்றல், சிந்தனா சக்தி முதலிய உள்ளமைப்புகளும், உடல்நிலையும் புதிய சக்தியும் வளர்ச்சியும் பெற்று ஆராய்ச்சித் துறையில் ஆழ்ந்து, அகன்று, நுண்ணிதாகச் சென்று புதிய சாதனைகளை நிலை நாட்டும் திண்மை பெற்றுத் திகழ்ந்தன.

1925ம் ஆண்டு தொடக்கம் 1947 வரை அடிகளார் செய்து நிலைநாட்டிச் சென்ற கல்வித் தொண்டுகள் குறிப்பிடத்தக்க சிறந்த அம்சங்கள் உடையனவாகும். யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் காலத்தில் சமூகம் அடைந்திருந்த இரண்டுங் கெட்ட நிலை விபுலானந்தர் துறவியாக ஈழம் திரும்பி வந்த காலச் சூழ்நிலையிலே மட்டக்களப்புத் தமிழ்ச் சமூகத்திலும் நன்றாக வேரூன்றிக் கிடந்தது. யார் உண்மைச் சைவர்? யார் உண்மைக் கிறிஸ்தவர் என்று அறிய முடியாதபடி சமய வாதிகளிடையே அரசியற் செல்வாக்கே தலைவிரித்தாடிய காலத்தில் விபுலானந்த சுவாமிகள் தமது கல்விப்பணியை ஆரம்பிக்கலானார். சுவாமிகள் சமூகத்தைப் பிடித்திருந்த தொரு பெரிய நோயை முன்பு களைந்தெறிந்தார். அதுதான் அச்சம் என்கின்ற நோய். மேல்நாட்டு மிஷனரிகளையும், அவர்களுக்குப் பக்கபலமாக ஆதரவளித்து நின்ற வெள்ளை அதிகாரிகளையும் கண்டு தமிழ்ச் சமூகம் அஞ்சிக் கிடந்த அவலப் பிணியினை மாற்றி மக்களிடையே அன்புப் பிணிப்பினை உண்டாக்கி வைத்து மனித உரிமையைப் பாதுகாத்த ஆரம்பப் பணியானது அடிகளாரின் கல்வித் தொண்டுக்கு அத்திவாரமாக அமைந்தது. அதிகாரத் திமிர்பிடித்திருந்த அதிகாரிகளின் உள்ளம் உணர்ச்சி பெற்று அன்பில் நெகிழ்ந்தது. பரஸ்பர நல்லெண்ணத்தை வளர்ப்பதிலே அடிகளார் வெற்றி பெற்றார். அடிகளாரின் சேவை அப்பளுக்கில்லாத புனித சேவையாய் நிகழ்ந்தமையால் எல்லா மதத்தினரும் இனத்தவரும் தம்முள்ளே பேத உணர்ச்சி நீங்கப் பெற்று ஒரு முகமாக வாழும் சமூக நிலைமை நாட்டில் ஏற்படலாயிற்று. இதனால் அடிகளாரின் கல்வித் தொண்டு தமிழர், கிறிஸ்தவர், முஸ்லிம், பௌத்தர் முதலிய எல்லோரையும் இணைத்துவைத்து ஒருமைப்பாட்டுக்கு ஒரு வித்தாக வேரூன்றியதை இந்த நாடு மறக்க முடியாது. மறக்கவும் கூடாது.

1926ல் நாட்டில் இருள் நீங்கி ஒளி பரந்து மக்களிடையே கல்வித் துறையில் ஒரு உத்வேகம் உண்டாயிற்று. சைவப் பள்ளிகளைத் தாபிப்பதும், அவற்றுக்கு அரசினர் நன்கொடை வழங்குவதும் மறைமுகமாய் பாதிக்கப்பட்டு வந்த நிலை மறைந்து போயிற்று.

1925ம் ஆண்டிலே மட்டக்களப்பு, காரைதீவு, ஆனைப்பந்தி, மண்டூர், ஆரையம்பதி என்னும் ஊர்களிலுள்ள சைவப் பாடசாலைகளை நடத்தும் பொறுப்பு மட்டக்களப்பு விவேகானந்த சபையாரால் அடிகளாரிடம் ஒப்படைக்கப்பட்டது. மட்டக்களப்பு கல்லடி உப்போடையிலே தாபிக்கப் பெற்றுள்ள சிவானந்த வித்தியாலயமே கிழக்கிலங்கையில் அடிகளாரின் திருவுருவம் போன்ற தோற்றமுடையது. அக் கலாசாலை அமைந்துள்ள நிலப்பகுதியானது ஸ்ரீராமகிருஷ்ண ஆச்சிரமத்தையும், மாணவர் குருகுலத்தையும் கொண்டுள்ளதாய் ஈழநாட்டின் தபோவனம் போன்று காட்சியளிக்கின்றது. இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்களாகிய எல்லோரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ந்து நிற்கின்ற சிவானந்த வித்தியாலயம் அடிகளாரின் விசாலயான நோக்கத்தைப் பிரதிபலித்து விளங்கும் காட்சியானது வெளி யுலகினைப் பெரிதும் கவர்ந்து நிற்பது குறிப் பிடத்தக்க ஒரு செய்தியாகும்.

திருக்கோணமலை இந்துக் கல்லூரியும், யாழ்ப்பாணம் வைதீஸ்வரா வித்தியாலயமும் அடிகளாரின் தன்னலமற்ற கல்வித் தொண்டி னால் மிகவும் உயர்நிலையடைந்து விளங்கு கின்றன. இவற்றைத் தொடர்ந்து மட்டக் களப்பின் பல பாகங்களிலும் தோன்றிய பல கல்விச்சாலைகளால் நாடு மறுமலர்ச்சியடைந் துள்ளதைப் பிரத்தியட்சமாகக் காணமுடி கின்றது.

ஈழநாட்டில் அடிகளாரிட்ட கல்வி வித்தா னது ஆரம்பக் கல்வியையும், உயர்தரக் கல்வி யையும் விருத்தி செய்து ஈழநாட்டில் பல்க லைக் கழகம் என்னும் கலா விருட்சத்தைத் தோற்றுவித்ததற்கேற்ற அங்குரார்ப்பணமா யிற்று. தென்னிந்தியாவிலும், ஈழநாட்டி லும் பல்கலைக் கல்வியை உச்சநிலையில் வைப்பதற்குரிய மார்க்கங்களை ஆராய்ந்த அறிவாளிகளுக்கு அடிகளாரின் நல்லாலோச னைகள் மிகவும் பயன்பட்டன. 1927ல் சென் னையில் நிகழ்ந்த ஆராய்ச்சி மகாநாட்டில் பேரறிஞர்களின் ஆக்கபூர்வமான ஆலோச னைகளை உருப்படுத்தும்வகையில் அடிகளார் கூறிய ஆலோசனையின் பயனாகவே சிதம் பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தோன் றியது, என்று கூறினும் அது புனைந்துரையா காது. 1931 - 33 வரை அடிகளார் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது தமிழ்ப் பெரும் பேராசிரியராக அப் பீடத் தினை அணிசெய்த நிகழ்ச்சியும் இதனை அரண்செய்து நிற்கின்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அடிகளார் தொண்டு செய்த காலப்பகுதியிலேதான் அடிகளாரின் யாழ்நூல் கருக்கொண்டதெனக் கூறுவது பொருத்தமாயிருக்கும்.

1943 தொடக்கம் 1947ல் தமது உடற் பொறை நீங்கும்வரை இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைப் பீடத்தின் பெரும் பேராசியராயமர்ந்து அளப்பரிய பணிபுரிந்து தமது இறுதி மூச்சினை அடிகளார் அங்கேயே விடும் பேற்றுக்கு உரியவரானார். ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் விரிவுரை நிகழ்த்து வோரைப் போதனாசிரியர்கள் என்றும்; பல்க லைக் கழகங்களில் விரிவுரை நிகழ்த்துவோ ரைப் பேராசிரியர்களென்றும்; அவ்வத்துறைப் பீடங்களின் தலைவர்களைப் பெரும் பேராசி ரியர்களெனவும் வழங்க வேண்டும் என்பது அடிகளாரின் அபிப்பிராயமாகும்.

அடிகளார் கலாசாலைகள், பல்கலைக் கழகங்கள் என்னும் எல்லைகளையும் கடந்து அப்பால் நின்று செய்த கலைத்தொண்டு சாசு வதமானது. அவரது மரணத்தின் பின்பு உலகம் அறிந்து கொள்ளும் வண்ணம் அது எஞ்சி நிற்கின்றது.

> "தக்கார் தகவிலர் என்பது அவரவர்
> எச்சத்தாற் காணப்படும்"

என்னும் திருக்குறளுக்கு உதாரணமாக விளங்குகின்ற இருவருள்ளே முதற் பெருந்த கையார் ஆறுமுக நாவலர்; அடுத்தவர் நமது விபுலானந்த அடிகளார். இருவரும் துறவிக ளாயிருந்தும் 'எச்சம்' உடையவர்களாயிருப் பதை நாம் காண்கிறோம். எச்சம் என்பது பிள்ளைகளை மாத்திரம் குறிக்கும் சொல் லன்று.

அடிகளார் நமது நாட்டுச் சிறுவர் சிறுமி யரை நோக்கி உள்ளமுருகினார். மட்டக்களப் பிலும் யாழ்ப்பாணத்திலும் குருகுல வாசங் களை அமைத்து மாணவர்கள் ஆசிரியர்க ளோடு உடனிருந்து, உடனுக்கு உடன் பழகி, உயர்கலை பயின்று, நாட்டின் நற்சிற்பிகளாக உருவாகும் வாய்ப்பினை உண்டாக்கி வைத் தார். அடிகளாரின் உள்ளக் கருணையை நமது இளஞ் சந்ததி இன்று அனுபவிக்கின்றது. மட் டக்களப்பு கல்லடி உப்போடையில் அமைந் துள்ள குருகுல வாசம் சாதி சமய பேதமின்றி எல்லாராலும் பாராட்டப்படும் ஒரு சிறந்த முன்மாதிரியான தாபனமாகும்.

இக் குருகுலத்தின் மூலம் நம் நாட்டுக்கு சிறுவர்கள் தன்னம்பிக்கையும், சுயதேவைக்கு உழைக்கும் ஈடுபாடும், தியாக சேவை செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளப் பண்பும் உள்ளவர்களாக நாடுமுழுவ திலும் பரந்துவாழும் தகுதியுடைய போதனை சாதனைகளில் சித்தி பெற்றவர்களாக தம்மை உருவாக்கிக் கொள்ளும் சந்தர்ப்பம், சமசந் தர்ப்பம் உள்ளவர்களாக; உதவுங் கல்வியினை, தேடுங்கல்வியினைப் பயின்று வருகின்ற தேசி யத்திறனை வேறெங்கும் காணமுடியாது.

ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் இலங்கைக் கிளையினை அரசாங்கச் சபையில் நிறைவேற் றிய சட்டத்தின் மூலமாக நிலையும் மதிப்பும் பெறச் செய்த பெருமை குருதேவரின் அருள் நோக்கம் பெற்ற விபுலானந்தருக்கு எளிதாகக் கைகூடியது ஒரு வியப்பன்று. ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தினரின் சமய கலாசாரத் தொண்டுகள் விபுலானந்த அடிகளை நமக்கு என்றும் நினை வூட்டிக் கொண்டிருக்கின்றன.

உயர்தர வேதாந்த சஞ்சிகைகளாகிய 'பிரபுத்த பாரதா', 'வேதாந்த கேசரி', 'இராமகிருஷ்ண விஜயம்' என்னும் வெளியீடு களின் ஆசிரியராகவும், கொழும்பு 'விவேகா னந்தன்' என்னும் சஞ்சிகையின் ஆசிரியராக வும் அடிகளார் புரிந்த சமய கலாசாரத் தொண்டுகள் இன்றும் பயன்படும் ஆக்பூர்வ மான சாதனங்களாகத் திகழ்கின்றன. 1939-41ம் ஆண்டுப் பகுதி பத்திரிகையாசிரியராகத் தொண்டு பூண்ட காலமாகும்.

இலங்கைக் கல்விச் சீர்திருத்தச் சபையி லும், சென்னைப் பல்கலைக் கழகம் முதலிய வற்றின் ஆலோசனைச் சபைகளிலும், யாழ்-ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்க ஆலோ சகர் சபையிலும், கரந்தைத் தமிழ்ச் சங்க ஆலோசனைச் சபையிலும் பிற கல்வி ஆலோ சனைச் சபைகளிலும் அங்கம் வகித்து நமது அடிகளார் கூறிய ஆலோசனைகளால் கலா பீடங்கள் அடைந்த புதுமை கலந்த உயர்ச்சி அளப்பரியதாகும்.

பன்மொழிப் பண்டிதராய் விளங்கிய அடிகளார்க்கு மொழி பெயர்ப்புக் கலை கை வந்த ஒரு பொருளாயிற்று. இதனால் மேல் நாட்டிலக்கியங்கள், சேக்ஸ்பியர் நாடகங்கள் மகாகவி தாகூர் போன்ற கவிஞர்களின் புது மைக் கவிகள் பல அடிகளாரின் நாநலங் கனிந்த தமிழ்ப் பாடல்களாலும், உரைநடை களாலும் உலகுக்கு உபகரிக்கப்பட்டுள்ளன. 'மதங்க சூளாமணி' என்னும் நாடகக் கலை நூல் செகசிற்பியாரின் கவிதைச் செல்வத் தைத் தமிழ் மக்களுக்குத் தொகுத்து உபகரிக் கின்ற விழுமிய நிதிப் பேளையாகும். பண்டித மணி கதிரேசன் செட்டியார் இயற்றிய 'மண் ணியற் சிறுதேர்' என்னும் நாடகத்துக்கு அடி களார் எழுதியுள்ள அணிந்துரையில் அன்னா ரின் வடமொழி நாடக இலக்கணத்தின் நுண் ணிய அறிவினைப் பரக்கக் காணலாம்.

பூஞ்சோலைக் காவலன் என்னும் பாடற் பகுதியில் மகாகவி தாகூரின் பாடல்களை மொழிபெயர்த்து இனிமைததும்ப உபகரித் துள்ள அடிகளார் மூலநூலையும் பார்க்கத் தமிழ் மொழி பெயர்ப்பினை இனிதாகச் சுவைக்கும் வண்ணம் தந்திருக்கும் நாவன்மை எல்லார்க்கும் அமைவதில்லை.

சொல்லாக்கத் துறையில் அடிகளார்க்கு நிகரான திறமையுடையோரைக் காண்பது அரிதாகும். சொல்லாக்கம் செய்யும் போது முதலிலே தமிழ் நூல்களிற் பரந்துகிடக்கும் சொற்களைக் கண்டு எடுத்தாண்டு பயன் கொள்ள வேண்டும். தமிழில் பெறமுடியாத சொற்களை வட மொழியிலிருந்து பெறவேண் டும். இரு மொழியிலும் பெறமுடியாத போது தான் வேற்று மொழிச் சொற்களைப் பயன் படுத்த வேண்டும். சொற்கள் எழுத்துச் சிக்க னமும், நாவுக்கு உச்சரிக்க எளிதயும் இனிதா யும் அமையும் அமைதியுங் கொண்டு வழங்க வேண்டும் எனக்கூறி உதாரணங்களும் காட் டிச் செல்லும் அடிகளாரின் சொல்லாக்கத் திறமை போற்றுதற்கு உரியதாகும். 1936ம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடந்த சொல்லாக்க மகாநாட்டுக்கு அடிக ளார் தலைமை தாங்கிய செய்தியும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

இனி, நூலாசிரியராக அடிகளார் செய்த ஆக்கபூர்வமான தொண்டுகள் பலவற்றுள்ளே சிலவற்றைக் கூறி இக் கட்டுரையை நிறைவு செய்கின்றேன். செய்யுள் நடையிலும் யாழ் நூல் என்னும் பெயர் கொண்ட ஆராய்ச்சிப் பெருநூலனாது இசைத்தமிழ் பற்றிய ஒரு மூல நூலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஆயிரம் ஆண்டுகளாக மறைந்து கிடந்த தமிழ் இசைக் கலையின் நுட்பங்களை ஆராய்ச்சி முறையாக விரித்து விளக்கி வெளிப்படுத்துகின்ற ஒரு பெரு நூலாகும். மறைந்து ஒழிந்து போன இசை நுணுக்கங்களையும், சிலப்பதிகாரத்து அரங்கேற்று காதையிலும் சங்க நூல்களுள்ளும் தலைமயங்கிச் சிதறுண்டு கிடந்த இசை மரபுகளையும் ஆராய்ந்து விஞ்ஞானரீதியாக இசையிலக்கண வரம்பு காட்டி, இதுதான் சங்க காலத்துத் தமிழர் கையாண்ட இசை மரபு; இவைதான் பழந்தமிழ் மக்கள் வசித்த யாழ்க்கருவிகள் என வரையறுத்துக் கூறுகின்ற இந்நூல் தமிழ் இசை ஆராய்ச்சியாளர்களுக்கு இசைக் கடலைக் கடப்பதற்கேற்ற கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றது.

அடுத்துக் குறிப்பிடுதற்குரியது மதங்க குளாமணியென்னும் நாடகக் கலை பற்றிய நூலாகும். மதங்கர் என்பது நாடக ஆசிரியர்கள். குளாமணியென்பது சிரோரத்தினம். நாடக ஆசிரியர்களுக்கெல்லாம் சிரோன்மணி போல் விளங்குகின்ற ஆசிரியர் செகசிற்பியாரின் பெயரைத் தாங்கி வெளிவந்துள்ள இந்நூலானது, இந்நூலின்கண்ணே தமிழ்மொழி, வடமொழி நாடக இலக்கண அமைதிகளையும், ஆங்கில நாடக இலக்கண அமைதிகளையும் எடுத்துக்காட்டி ஒப்புநோக்கிக் கண்ட முடிவுகளை உலகுக்கு உபகரிக்கின்ற இந்நூல் அடிகளாரின் மொழிபெயர்ப்புத் திறமைக்கும் ஓர் உரைகல் போன்றதாகும். உலகம் முழுவதையும் ஒரு நாடக மேடையாகவும், ஆண் பெண் இருபாலாரையும் நடிகர்களாகவும் உருவகஞ் செய்து காட்டிய செகசிற்பியாரின் கற்பனை வனப்பிலும், கவிதா சாமர்த்தியத்திலும், அறிவாற்றலிலும் ஈடுபட்டு இயற்றிய இந்நூலில் அடிகளாரின் மனப்பண்பும், கனிவு பெற்ற நாநலமும், ஆழ்ந்த புலமையும் விளங்கித் தோன்றுவதை நாம் காணலாம்.

என்னும் விவேகானந்த ஞான தீபம், கரும யோகம், ஞானயோகம், நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை, விவேகானந்த சம்பாஷணைகள் முதலிய நூல்களும் குறிப்பிடத்தக்க சிறந்த பெருநூல்களாகும். விபுலானந்தர் பிரபந்தத் திரட்டு என்னும் பெயருடன் ஒரு தொகைநூல் வெளியிடப்படுமேல் அடிகளார் இயற்றிய நூல்கள் பலவற்றை உலகம் அனுபவித்தற்கு வசதி ஏற்படும்.

அடிகளார் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதி உபகரித்துள்ள கட்டுரைகளோ மிக மிகப் பலவாகும். அவற்றுள்ளே வண்ணமும் வடிவும், நிலவும் பொழிலும், மலையும் கடலும் கவியுஞ் சால்பும், நாடும் நகரமும், ஆங்கில வாணி முதலிய கட்டுரைகள் நம்மிடையே வாழ்ந்து மறைந்து போன இளம் எழுத்தாளர் அருள் செல்வநாயகம் அவர்களால் 1963ல் வெளியிடப்பட்டுள்ளன. அன்னார்க்குத் தமிழுலகம் கடமைப்பட்டுள்ளது.

குருதேவர் வாக்கியம், கங்கையில் விடுத்த ஓலை, செகசிற்பியார் நாடகக் கவிதைகளின் மொழி பெயர்ப்புகள், இறைவனுவக்கும் மூன்று மலர்கள், மகாலக்குமி தோத்திரம், மகாகவி தாகூரின் கவிதைகள் சிலவற்றின் மொழிபெயர்ப்புக்கள் முதலாக ஆயிரக்கணக்கான கவிதைகள் மூலம் அடிகளார் செய்துள்ள கல்வித் தொண்டுகள் அளவில் அடங்காதன. அடிகளாரின் கவிதைகள் தனித்தன்மை வாய்ந்தன. நெகிழ்ச்சியும், தெளிவும், எளிமையும், இனிமையும் வாய்ந்தன.

உண்மையும் அழகும் செம்மையுமாகிய வனப்புகள் ஒருங்கேயமைந்த இக் கவிதைகள் அறிவும், உணர்ச்சியும் தந்து, செவிக்கும் மனத்துக்கும் இனிமையூட்டி, உயிர் தளிர்க்கச் செய்யும் அமைதியுடையனவாகும் அடிகளாரின் கவிதைகளுட் சில அன்பர் அருள் செல்வநாயகத்தின் முயற்சியால் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடிகளாரின் கல்வியறிவு பல ஆக்க வேலைகளிற் பயன்பட்டுள்ளது. அடிகளார் மேல்நாட்டுக் கல்வி முறைகளிலே நன்கு திளைத்தவர். எனினும், மேல்நாட்டிலுள்ள உதவாத போக்குகளில் அவர் மோகங்கொள்ளவில்லை. மேல்நாட்டு நாகரீகப் பண்புகளை அவர் நன்கு கடைப்பிடித்து நமது நாட்டுக் கல்வி முறையிலே பயன்படுத்தியமை ஒரு முன்மாதிரியாகக் கொள்ளத்தக்கது.

ஒருவர் உண்மையான நிபுணரானால் அவரது நிபுணத்துவம் ஆக்க வேலைகளிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிபலிக்க வேண்டும். ஒரு கணித மேதை மற்றவர்களுக்கு மேலால் கணக்கு விடாமல் தமது நிபுணத்துவத்தை ஆக்க வேலையிற் பயன்படுத்தி உலகம் நன்மையடையச் செய்ய வேண்டும் என்பார். அடிகளாரின் இந்த விசாலமான கல்விக் கொள்கைக்கு அவர்கள் இயற்றித்தந்துள்ள யாழ் நூலே சான்றாக அமைந்துள்ளது. கணிதத்தை அடைப்படையாகக் கொண்டு தோன்றியது யாழ் நூல்.

கற்ற கல்வியினால் பிறரை வெருட்டக் கூடாது. தன்னையும் பிறரையும் ஆளாக்கிக் கொள்ள வேண்டும் என்று அடிகளார் அடிக்கடி சொல்வார். ஒருவர் மற்றவரின் அறிவைத் தம்முடைய அறிவால் கூர்மை பார்ப்பதை விட, ஒருவரின் அறிவையும் கூட்டாகப் பயன்படச் செய்தல் நாட்டை உருவாக்குவதற்கு ஏற்ற வழியாகும் எனக் கூறுவார்.

நம்நாட்டுக் கல்விமான்களும் நிபுணர்களும் நாட்டின் இயற்கையைத் துணையாகக் கொண்டு செயல்புரிந்து, புதுப்புது முறைகளைக் கண்டு, அவற்றைக் கையாண்டு நாட்டை முன்னேற்றப் பாதையிலே செலுத்தப் பழக வேண்டும் என ஆலோசனை கூறுவார். அடிகளார் சர்வதேசிய நோக்கம் உடையவராயினும், தமது தேசிய நோக்கத்தில் நிலைத்து நின்று தனித் தன்மையைப் பேணிக் கொண்டு அகில உலக நாடுகளுடன் தோழமை பூண வேண்டும்; தனது தேசிய நோக்கை மறந்து அயல் நாடுகளுடன் தோழமை கொள்ளப் போவது அவமானமாகுமென உணர்ச்சி ததும்பக் கூறுவார். இந்த எண்ணங்களையெல்லாம் அடித்தளமாகக் கொண்டு பல்கிப் பெருகியதே அடிகளாரின் கல்வித் தொண்டு என்பது நினைவில் வைப்பதற்குரியதாகும்.

அடிகளார் ஒரு தீவிர விஞ்ஞானி; அதே நேரத்தில் தெய்வ நம்பிக்கையில் உறுதிபூண்ட துறவியாய் மெய்ஞ்ஞானத்தில் நிலைநின்றார். நாட்டு மக்களை விஞ்ஞானத்தின் துணை கொண்டு மெய்ஞ்ஞான வழிக்குத் திசைதிருப்பிய ஒளி படைத்தவர் நம் அடிகளார்.

அவர் ஒரு கல்விப் புலவர்; அதே நேரத்தில் இனிய உரைநடை கைவந்த பேராசானாய் விளங்கினார். அவர் ஒரு இலக்கிய விற்பன்னர். அதே நேரத்தில் ஒரு கணித மேதையாய் விளங்கி அழகுக் கலைகளையும், நுண் கலைகளையும் இணைத்து வைத்த அருஞ் செயல் புரிந்தவர்.

இத்தகைய அதியற்புத சாதுரியமும் மாதுரியமும் ஒருங்கிணைந்த அடிகளாரின் கல்வித் தொண்டு வெறும் வறண்ட அறிவை மாத்திரம் துணையாகக் கொண்டதல்ல. அது உயிர்ப்பூட்டுவது. உண்மை காட்டுவது. தன்னம்பிக்கை தருவது. சுயதாபரிப்புக்கு வழி செய்வது. மனிதனையும் மனிதனையும் மனத்தால் இணைத்து வைப்பது. அக நிறைவும் புற நிறைவும் அளிப்பது. மனிதனை மனிதனாக வாழச் செய்வது. மனிதனுக்காக வாழப் பண்ணுவது. அடிகளாரின் இந்தக் கல்விக் கொள்கையின் ஒளிவழியே நமது இளஞ் சந்ததி செல்வதாக அடிகளார் காட்டிய இந்தக் கல்விப் பாதையிலே சென்று நாடு மறுமலர்ச்சி பெறுவதாக.

(சென்னை தமிழ் வளர்ச்சிக் கழக கலைக் களஞ்சிய தொகுதிக்கு அனுப்பிய கட்டுரையின் விரிவாக்கம்)

நன்றி: புலவர்மணி நினைவுப்பணி மன்றம்.

□

வெள்ளைநிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளலடியிணைக்கு
வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக்கமலமடி உத்தமனார்
வேண்டுவது.

□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டு கவிதைகள்

எனது மன வெளியில்
நான் -
பாலை வெளியில்
எனது மூளைச் சாலைகளில்
குருதிக் கோடுகள்
வித்தியாசம் வித்தியாசமான
ஒருங்கொட்டல்கள்
கணத்தாக்கங்களின் பரிமாணம்
பரடேயின் கூலோம்களில்
அதன் சேமிப்பு
பாலையின் ஏற்றம்
இவை -
என் மூளையைச் சுற்றி
அணுக் கரு சுற்றும் இலத்திரன்கள் போல்.

□

இந்தப் பிரபஞ்சம்
வெடிக்கப் போகிறதாக்கும்
மூளையைப் பிய்த்துக்கொண்டு எங்கே
போகிறாய்?
சற்றுத் திரும்பு
உன் நிழல் உனக்குத் தெரிகிறதா?
இல்லை, என்று சொல்லப் போகிறாயா?
ஆம், என்று சொல்ல நினைக்கிறாயா?
அது உனது விருப்பம்
ஆனால் -
போகப் போக நீயே உனக்குத் தெரிய
மாட்டாய்;
என்பதை மட்டும்
சொல்லி விடுகிறேன!

- மு. மு. மு. பாசில் -

□

## வானத்தின் கீழேதான்

உள்ளே
இருக்கப் பிடிக்காமல்
வெளியே வந்தேன்
வீட்டை விட்டு......

இப்போது
ஊருக்கு
உள்ளே இருந்தேன்.

உள்ளே
இருக்கப் பிடிக்காமல்
வெளியே வந்தேன்
ஊரை விட்டு......
இப்போது
உலகிற்கு
உள்ளே இருந்தேன்.

தாங்க முடியாமல்தான்
மீறிக் கொண்டிருக்கிறேன்
வாழ்க்கையில்......

மீறமுடியாமல்தான்
தாங்கிக் கொண்டிருக்கிறேன்
வாழ்க்கையை!

- வாசுதேவன்

□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரையில் வீழ்ந்த கொடி

- செஹறபா -

பாடசாலை மதியத்தின் சோம்பலுடன் நகர்ந்து கொண்டிருந்தது. ஏழாம் வகுப்பு அறை. இப்றாகீம் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். மாணவர்கள், மதியத்தின் தூக்க கிறக்கத்துக்கும், ஆசிரியர் பற்றியுள்ள அச்சத்துக்கும் புழுக்கத்துக்குமிடையே தவித்துக்கொண்டிருந்தனர். பாடசாலையில் இடப்பற்றாக் குறையால் வேறு தேவைகளுக்காகக் கட்டப்பட்ட அறை வகுப்பறையாக மாறியது. அதன் வாயிலும் ஜன்னலும் காற்றோட்டத்துக்குப் போதுமானதாக இல்லை.

ஹசன் பின் வரிசையில் ஜன்னலோரமாக அமர்ந்திருந்தான். அவன் வகுப்பில் முதன்மையான மாணவர்களில் ஒருவன். ஆதலால் ஆசிரியரின் கவனம் அடிக்கடி அவன் பக்கம் திரும்பிக் கொண்டிருந்தது. அவனும் வழக்கத்துக்கு மாறாக உற்சாகமின்றிக் காணப்பட்டான். பக்கத்தில் இருக்கும் றகீம் அடித்தொண்டையில் அடிக்கடி விடும் பகிடிகள் கூட அவனை உற்சாகப் படுத்தவில்லை. அவனை இனம் தெரியாத சோகம் ஆட்கொண்டிருந்தது. அதனால் அவன் கவனம் பாடத்தில் பதியவில்லை.

இதை ஆசிரியரும் கவனித்து விட்டார் போலும். அவனிடம் கேள்வி ஒன்றைக் கேட்டார். அவன் மென்று விழுங்குவதைக் கண்டு கண்களில் வியப்பை வெளிப்படுத்தி விடு ஸமதிடம் கேட்டார். அவன் பட்டென்று பதிலளித்து விட்டு இவனைப் பெருமையுடன் திரும்பிப் பார்த்தான். வகுப்புப் பரீட்சைகளில் முதலாம் ஆளுக்குப் போட்டியிடும் மூவருள் ஸமதும் ஒருவன். அடுத்தவன் மத்தீன்.

நேரம் நகர நகர அவனை ஆட்கொண்ட சோகம் அதிகரித்தது. அவனுக்கே வியப்பாக இருந்தது. அவனையறியாமலே கண்கள் கண்ணீரைச் சிந்தின.

என்ன ஹசன் அழுகிறாய் என றகீம் கேட்டபின்தான் அவனும் கண்ணீரை விரித்திருந்த கொப்பியில் பார்த்தான். அவனுக்கு பதில் சொல்ல முடியவில்லை.

பாடத்தை முடிவுக்குக் கொண்டு வந்த இப்றாகீம் ஆசிரியர் அவனை அருகிலழைத்தார்.

''என்ன நீ இண்டைக்கு ஒரு மாதிரியாய் இருக்காய்! ஆரும் அடிச்சதா? ஏசினதா?'' என்றவாறு மத்தீனைப் பார்த்தார். அவனுக்கும் மத்தீனுக்கும்தான் இடையிடை சண்டை எழும். ஹசன் இல்லை என்று தலையை அசைத்தான்.

''அப்ப...? வாப்பா, உம்மா ஏசினதா? அடிச்சதா...? அவியதான் உன்னோடே இரக்கமே... வாப்பா ஊரிலயா?''

''இல்ல சேர் கொழும்பில'' பாடம் முடியும் மணியடித்தது. ''சரி போய் இரு'' என்றவாறு ஆசிரியர் வகுப்பறையை விட்டுச் சென்றார்.

மீதி மூன்று பாடங்களிலும் அவனது கவனம் பதியவில்லை. சோகத்துடன், சோகத்துக்கான காரணம் என்ன என்ற கவலையும் சேர்ந்து கொண்டது.

பாடசாலை கலைந்து வீட்டை அடைந்த அவன் புத்தகங்களை மேசையில் வைத்து விட்டு சிறிய கோட்டைக் கழற்றி கொழுவி விட்டு பாயொன்றை எடுத்துக் கொண்டு விறாந்தையில் சாப்பிட உட்கார்ந்தான்.

அவன் உம்மா அவனின் எதிரில் 'சுப்றா'வை விரித்து பீங்கானையும் தண்ணீர்க் கோப்பையையும் வைத்து விட்டு குசினிக்குள் சென்றார்.

அவன் சகோதரி கிணற்றடியில் உடுப்புக் கழுவிக் கொண்டிருந்தாள். சிறிது பதற்றத்துடன் இஸ்மாயில் காக்கா வெளிக் கேற்றில் வந்து நின்று, ''உம்மா எங்க புள்ள?'' எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டார். ''ருசினிக்குள்ள'' என சகோதரி பதில் சொல்லும் போதே சோற்றுப் பானை யுடன் தாயும் வெளிப்பட்டார்.

''என்ன புள்ள சாச்சா கேட்ட?''

''உங்களத் தேடினாங்க''

இஸ்மாயில் சற்று முன்நோக்கி வந்து, ''காக்காட வேல முடிஞ்சுதாம்... போஸ்டர் பீசுக்கு லாபிர் காக்காக்கு டெலிபோன் வந்த தாம்'' என்றார்.

அவன் உம்மாவின் முகத்தில் மகிழ்ச்சிக் களை படிந்தது. அவன் வாப்பா கொழும்புக் குச் சென்ற அலுவல் முடிந்தால் அவர்கள் வாழ்க்கை மீண்டும் சிறப்படையும்.

இஸ்மாயில் சாச்சாவுக்கு யோசனையாய் விட்டது. தான் சொன்னது விளங்கவில்லை என்ற சந்தேகம் எழ, விளக்கமாகச் சொன் னார். ''காக்கா... மௌத்தாப் போனாங்க ளாம். போஸ்டபீசுக்கு லாபிர் காக்காக்கு டெலிபோன் வந்ததாம். மையத்து வருமாம்.'' என்று கூறிவிட்டு அவர் நடந்து விட்டார். அவ ருக்கும் துயரம் தாளவில்லை.

உம்மாவின் கையிலிருந்த சோற்றுப் பானை விழுந்து சிதறியது. அவர் மயங்கி விழுந்தார். கிணற்றடியிலிருந்த சகோதரி அழுது புலம்பிக் கொண்டு தாயருகில் ஓடி வந்தாள். பசியோடிருந்த ஹசன் செய்வதறி யாது தாயின் அருகில் சென்றான். தாயின் நிலையைப் பார்க்க அவனுக்கு சகிக்க வில்லை. அவனும் அழுதான். அழுகைச் சத்தம் கேட்டு பக்கத்து வீட்டிலிருந்த மூத்த சகோத ரியும் பிள்ளைகளும் ஓடிவந்தனர்.

சனம் ஒவ்வொன்றாய்க் கூடத் தொடங் கியது. சற்று நேரத்தில் ஊரே கூடிவிட்டது. பெண்களும் கூட்டம் கூட்டமாக வந்த வீட்டி னுள்ளிருந்து அழும் பெண்களோடு சேர்ந்து அழுதனர்.

சிறுவனான ஹசன் என்ன செய்வதென் றறியாது வீட்டுக்கும் வாசலுக்குமாக நடந்து திரிந்தான். பலர் துயரத்துடன் அவனது தலையைத் தடவி விட்டனர். அடுத்த வீட்டுச் சாச்சாதான் அவன் நிலையையுணர்ந்து, அவன் பசியைப் போக்க அழைத்துச் சென்றார்.

அடுத்த நாள் ஒரு பெரிய வேனில் மையித்து வந்து சேர்ந்தது. மையித்து கப னிட்டு சந்தூக்கில் வைக்கப்பட்டிருந்தது. கிரா மத்துச் சனங்கள் வேனையும் சந்தூக்கையும் புதினமாகப் பார்த்து அதிசயப் பட்டனர். வேனில், பார்லிமென்ற் சிகரட் கொம்பனி லிமிடட், கொழும்பு என்று பின்னணியில் கறுப்பு நிறத்தில் எழுதியிருந்ததை ஆங்கிலம் வாசிக்கத் தெரிந்தவர்கள் வாசித்து மற்றவர் களுக்குச் சொன்னார்கள்.

''கொழும்பில பெரிய முதலாளி ஒராள்ள வேனாம். அவர்ர செலவிலதான் மையித்து வந்ததாம். மரைக்காருக்கு கொழும்பிலயும் நல்ல செல்வாக்கு.''

''மறுகா என்ன? பெரிய மனிசந்தானே. ஆனா அற்ப ஆயுசு. ஆரு நெனச்ச மவுத்தாகு வாங்கெண்டு. ஐம்பத்திரண்டு வயசாம். மவுத் தாகுற வயச?... ம்ஹ்''

''நல்ல மனுசன். சேமனா இருக்கும் போது இந்த ஊருக்கு எவ்வளவு சேவை செய் தார். நல்ல வசதியா இருந்த மனுசன் வழிப் பறியால திடீரென நொடிச்சுப் போனார். காணி... வளவு... ஒவ்வொன்றா வித்துப் போட்டார். திருப்பி ஒரு தொழில் செய்யுற ஆயத்தமாகத்தான் அவர் கொழும்புக்குப் போனதாம்.''

''யானை யாவாரம் பண்ணித்தான் நொடிச்சுப் போனார். நம்ம ஊர் சனம் யானையைத் தொட்டுப் பார்க்கக் கிடச்சதே அவியளாலதான்.''

வேனுக்கருகில் கூடிநின்றவர்கள் இப்படிப் பேசிக் கொண்டனர். வீட்டுக்குள்ளிருந்து வந்த ஒருவர் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

''தம்பிர ஊட்ட லுஹறு தொழுதிற்று தஸ்பீஹு செய்து கொண்டிருந்த மனிசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென நீட்டி நிமிர்ந்து படுத்தாங்களாம். பெரியப்பா பெரியப்பா எண்டு தம்பிர மகள் எழுப்பியும் எழும்பாமப் போக டாக்குத்தரைக் கூட்டிக்கு வந்து காட்டினாங்களாம். டாக்டர் சொன்னதுக்குப் பிறகுதான் அவியளுக்கு மவுத்தாப் போனதே தெரிஞ்சிச்சாம். ம்ஹ்... நல்ல மவுத்து.''

பேசிக் கொண்டிருந்தவர்கள் வாசலில் விரிக்கப்பட்டிருந்த 'தோட்டு'ப் பாயில் ஒரு பக்கமாக அமர்ந்து கொண்டனர். அவர்களைச் சுற்றி அமர்ந்திருந்தவர்களும் மரைக்காரைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர். மரைக்காரின் மாமா முறையான ஒருவர் அவ்விடம் வந்து ஸலாம் சொல்லியவாறு அமர்ந்து கொண்டார். தூரத்தில் நின்ற ஹசனை அவர் கைகாட்டி அழைத்தார். ஹசனும் 'அப்பச்சி'யின் அழைப்பை ஏற்று அருகில் வந்தான். 'இஞ்சவாமனே' என்றவாறு அவனை மடியில் இருத்திக் கொண்டார்.

''மரைக்கார்ர உள்ளதுமொரு மகன். மகனெண்டா மரைக்காருக்கு உசிர். தனக்குக் கூடவே கூட்டிக்குத் திரிவார். வாப்பாக்கு பெரிய கோட்டு, மகனுக்கு சின்னக் கோட்டு. சுபஹுக்கும் மகனோடுதான் பள்ளிக்குப் போவார். பள்ளி லீவில வெளியூருக்கும் தன்னோட கூட்டிக்குப் பொய்ருவார். ம்ஹ்... இனி இந்தப் புள்ளக்கி யார் அப்படிச் செய்வார்?''

அப்பச்சி தலையைத் தடவியவாறு கூறக் கூற ஹசனுக்குப் பழைய நினைவுகளெல்லாம் வந்தது. 'மதுரசாக்களை சோதிக்கப் போகக்குள்ள எல்லாம் வாப்பா கூட்டிக்குப் போவாங்க. ஆலிமுமார் நல்லா கவனிப்பாங்க. சின்ன மரைக்கார் எண்டு சொல்லுவாங்க. கொழும்புக்கு எத்தினதரம் கூட்டிக்குப் போயிருக்காங்க. இனி நம்மள யாரு கூட்டிக்குப் போவா. ஒரு நாளல அடிச்சது கிடையாது. சும்மா பெரம்ப எடுத்துக்கு 'வெரட்டுவாங்க'' அவனுக்கு நினைக்கும் போதே கேவியது.

''அழாத மன'' என்றவாறு அப்பச்சி கண்களைத் துடைத்துவிட்டு கன்னத்தில் முத்தமிட்டு நெஞ்சோடணைத்துக் கொண்டார்.

''கொம்பற்ற கொடியாப் போனான்'' என்றார். இவற்றையெல்லாம் கவனித்தவாறு அவர்ந்திருந்த இஸ்மாயில் மாஸ்டர்.

''அப்படியும் செல்லேலா. சாதி சனத்துக்குப் பஞ்சமில்ல. அந்த மனுசன் ஒழைச்சி ஒழைச்சி சாதி சனத்தத்தானே கவனிச்ச. சாச்சாமாரெல்லாம் நல்ல நல்ல உத்தியோகத்தில இருக்காங்க. மூத்த மச்சான் சீப் கிளாக்கர். அந்த மனிசன் தேடினதில ஒண்டையும் வெக்கல்ல. ஊரில பெரும் பணக்காரணா இருந்து நொடிச்சுப் போனவர். கொழும்புப் பெற்றனில இந்தப் பெரிய ஊட்டைக் கட்டக்குள்ள, ஏன் மருமகன் இந்தப் பெரிய ஊட்டைக் கட்டுறயள். நாலு பொம்பளப் புள்ளயளுக்கும் இப்படிக் கட்டிக் குடுக்கலாம எண்டு கேட்டதுக்கு. இது என் மகனும் நானும் இருக்க. அல்லாஹ் தருவான் என்ர பொம்பளப் புள்ளயளுக்கு நான் கட்டிக் குடுப்பன் எண்டு சொன்னார். ஆனா அவருக்கு அது கைகூடல்ல. பெரிய ஊட்டுக்கு குசினியாயிருந்த இரண்டறைதான் இப்ப இருக்கு. ஒரு கொமர் இருக்கு. ஒண்டு மோசம் போயிற்று. இதுக்கு எளய தங்கச்சியும் ஒண்டிருக்கென்று ஹசனைச் சுட்டியவாறு மற்றவர்களுக்கு விளக்கிச் சொன்னார்.

அப்போது பாங்கொலி கேட்டது. பெண்களின் அழுகுரலும் சனத்தின் இரைச்சலும் அடங்கியது. பாங்கு முடிந்ததும் எல்லோரும் எழுந்தனர். சந்தூக்கு தூக்கப்பட்டது. பள்ளி நோக்கி ஊரே சென்றது.

அடுத்த வாரத்திலேயே ஹசன் பள்ளி செல்ல ஆரம்பித்தான். போகப் போக அவனுக்கு வாப்பா இல்லாத குறை பெரிய வந்தது. பள்ளி செல்லும் போது கிடைக்கும் பத்து சதமும் அடிக்கடி இல்லாமல் போனது. முப்பது வருடங்களுக்கு முந்திய அந்தக்காலத்தில் பத்து சதம் என்பது இரண்டு மூன்று பேருக்கு போதுமான 'பள்ளிக்காசு'. அக்காசுக்காகவே அவனைச் சுற்றி இரண்டு மூன்று பேர்.

எஸ். எஸ். சி. வகுப்புவரையுள்ள அவன் பாடசாலையில் இருந்த நல்ல தலைமை

ஆசியரை மாற்றுவதற்கு கல்விப் பகுதி எடுத்த முடிவை ஊரில் பெரியவர்கள் பலர் எதிர்த்தனர். அதில் ஹசனின் குடும்பமும் தீவிரமாக நின்றது. பல தூதுக்குழுக்களும் சென்றன. பயனேற்படாது போகவே, மாணவர் பகிஷ்கரிப்பு நடந்தது. மாற்றப்படும் தலைமையாசிரியர் திறமையானவர் ஆகையால் பகிஷ்கரிப்பு வெற்றிகரமாக நடந்தது. ஆனாலும் பயன் தரவில்லை. ஆகவே, மாணவர்களை விலக்கும் படலம் ஆரம்பமாயின. பல பெற்றோர்கள் இதில் தயக்கம் காட்டினர். ஆனால் முன்னணியில் நின்ற பெற்றோர்கள் சிலர் தங்கள் பிள்ளைகளை விலக்கவே செய்தனர். ஹசனும் அவன் சாச்சாபாறால் விலக்கப்பட்டு இரண்டரை மைலுக்கப்பாலிருந்த ஒரு பாடசாலையில் சேர்க்கப்பட்டான்.

காலையில் ஏழு மணிக்கே பாடசாலைக்குப் புறப்படவேண்டியிருந்தது. சாச்சாவின் பைசிக்கலில் தான் அவன் செல்லவேண்டியிருந்தது. இவர் பாடசாலையைத் தாண்டி மேலும் இரண்டுமைல் செல்லவேண்டியிருந்தாலும் தலைமை ஆசிரயராய் இருந்ததாலும் அவர் நேரகாலத்தோடு புறப்பட்டுச் சென்றார். அவரோடு செல்வதனால் இவனும் அதிகாலையிலேயே புறப்பட வேண்டியிருந்தது. அதனால் சிலநாட்களிலேயே ஹசன் அலுப்படைய ஆரம்பித்தான். சுணங்கிப் போனால் ஏச்சுவாங்க வேண்டியிருந்தது. சில நாளில் இவனை விட்டுவிட்டே அவர் சென்றுவிடுவார்.

ஹசனின் தந்தை மிகுந்த மார்க்கப்பற்றுள்ளவர். அதனால் அவர் உயிரோடிருக்கும் வரை இவன் தலையில் முடி வளர விடமாட்டார். தகப்பனைப் போல் அவனும் வட்டத் தொப்பி அணிந்திருப்பான். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தகப்பனும் மகனும் சீனித்தம்பியின் சலூனில் முடியெடுத்து விடுவர். முடியைக்கூட பேப்பரில் சுற்றி வாங்கி வந்து புதைத்து விடுவார் அவன் தந்தை.

அவன் சென்ற பாடசாலை இப்படியான ஆசாரமான மாணவர்களைக் கொண்டிராதது. ஊரில் படிக்கும்வரை இது ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. மாணவர்களில் பலரும், தலைமையாசிரியரும் கூட அவ்வாறிருந்ததாலும் அவன் தந்தைக்கு இராமத்திலிருந்த செல்வாக்குக் காரணமாகவும் அவன் பகடிக்குள்ளாகவில்லை. ஆனால் புதிய பாடசாலையில் அவன் சகமாணவர்களின் கிண்டலுக்குள்ளானான். அதனால் அவன் தலையில் முடி வளர ஆரம்பித்தது.

''தலை இறக்கல்லய?'' என்று சாச்சா அடிக்கடி கேட்டார். சாச்சாவின் தலையில் சாடையாக முடியிருந்ததால் அவர் கண்டிக்கவில்லை. முடி ஓரளவு வளர்ந்ததும் அவன் தொப்பியணிவதைத் தவிர்த்துவந்தான். சாச்சாவுடன் பைசிக்கலில் போகும் போது மட்டும் போட்டுக் கொண்டு, அவர் இறக்கிவிட்டுச் சென்றதும் கழற்றி இடுப்பில் செருகிக் கொண்டு பள்ளி செல்ல ஆரம்பித்தான். ஊரில் வீட்டிலும் வெளியிலும் தொப்பியின்றி நடமாட ஆரம்பித்தான்.

''வாப்பா இருந்தா, இப்படியெல்லாம் செய்வய?'' என அவன் தாய் அடிக்கடி அழுவாள். அவனுக்கது சங்கடமாக இருந்தாலும் காலப்போக்கில் பழக்கமாகிவிட்டது.

அவன் தலையில் முடி ஒரு எல்லைக்குமீறி வளர ஆரம்பிக்கவே அவன் சாச்சா கண்டிக்கத்தொடங்கினார். தண்டிப்பார் போலும் இருந்தது.

''நாளைக்கு நீ முடியை கணக்குக்கு வெட்டல்லயெண்டா, நான் கூட்டிக்குப் போய் இறக்கிவிடுவன்'' என்று சாச்சா இறுதி எச்சரிக்கை விடுத்ததும், காலையில் எழுந்ததும் காணாமல் போய்விட்டான். பதினொரு மணியளவில் வீட்டுக்கு வந்தவனை, தாயினழுகையும் தாத்தாவின் ஏச்சும் வரவேற்றன.

''சும்மா கத்தாமக் கெட'' என தாத்தாவை அதட்டினான்.

''வரட்டும் மச்சான்...'' என்று தாத்தா கறுவினாள்.

கண்ணாடியில் தனது முடியைப் பார்த்தான். ''என்ன கறுப்பா இருக்கு. எவ்வழகா இருக்கு... இத வெட்டச் சொல்லுறாங்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டுவனா? இன்னும் வளர்ப்பன்'' என சங் கர்ப்பம் எடுத்துக் கொண்டான்.

''இருட்டோட தண்ணிச் சோறும் தின் னாம வெட்டக்கெறங்கின நீ இப்ப வந்து நிக்காய்... தொப்பி போடுறதுமில்லை... தொழப் போறதுமில்லை... பள்ளிக்குப் இண் டைக்குப் போகல்ல... வா... சோறு வெச்சுத் தாறன்.''

''சோறு எனக்கு வேணா... பள்ளிக்குப் போறெண்டா சைக்கில் வாங்கித் தரவேணும்''

''மொளச்சி மூணு எல விடல்ல... அவ ருக்கு சைக்கில்... ஒனக்கு சைக்கில் ஓடத் தெரியுமா?'' என்று தாத்தா இளக்காரத் துடன் குறுக்கிட்டாள்.

''ஓ... றாணமடுவுக்கு வெள்ளாம வாடிக் குப் போகக்குள்ள வாப்பா 'நெஞ்சு நோகுது மகன் கொஞ்சந் தள்ளிக்கு வா' எண்டு செல்லி சைக்கிலைத் தருவாங்க. நான் தெத்தித் தெத்தி ஓடப் பழகிற்றன். அதப்பத்தி நீ யோசிக்காம சைக்கில் வாங்கித்தாவன்.''

''ஒனக்கு சைக்கில் வாங்கத்தான் இஞ்ச காசிருக்கு... மனிசன் படுறபாட்டுக்குள்ள அவ ருக்கு சைக்கில்.''

''அப்ப பள்ளிக்கு நடந்து போகவா?''

''ஏன் சாச்சா கூட போவன். மத்தாக்க ளும் போறாங்கதானே. அவியளுக்குக் கூட நீயும் போறதுதானே.''

''ஒவ்வொராளும் ஒவ்வொரு சைக்கில் வெச்சிருக்கானுகள். நேரத்துக்குப் போறானு கள், வாறானுகள். எனக்கும் சைக்கிலிருந்தா நானும் போவன்.''

''சைக்கில் இல்லாட்டி போகமாட்டயா?''

''இல்ல'' என்று திட்டமாகச் சொன் னான் ஹசன்.

''இஞ்சப் பாருங்கம்மா... இவன் சொல் லுறத்த... பள்ளிக்குப் போகமாட்டானாம்.''

தாய் எதுவும் பேசாது மௌனமாக இருந் தார். கண்ணீரும் பெருமூச்சும் விடுவதைவிட அவருக்கு வேறொன்றும் செய்யமுடியாதிருந் தது. செல்லமாக வளர்த்த மகன்; அடித்துப் பழக்கமில்லை; திட்டவும் தெரியாது.

''நீ போ புள்ள... தம்பி நாளைக்குப் பள் ளிக்குப் போவான்.''

''நான் போறன்... இவன்ர கோலத்தக் கண்டா மச்சான் ஏசுவாங்க'' என்று எரிச்ச லுடனும் கவலையுடனும் கூறிவிட்டு விரெட் டென எழுந்து சென்று விட்டாள் தாத்தா.

தாய் பெருமூச்சு விட்டாள். ''மச்சானுக் கிட்டச் சொல்லி சைக்கில் வாங்கித் தாறன். அது வரைக்கும் நீ பள்ளிக்குப் போ'' என்று மகன் ஒரு வார்த்தை சொல்லவில்லையே என்ற கவலையும் சேர்ந்து கொண்டது.

அன்று பிற்பகல் முழுக்க ஹசன் வீட்டிலி ருக்கவில்லை. மச்சான் அடிக்கடி அவனைத் தேடினார். இரவு ஒன்பது மணியளவில் வீட் டுக்கு வந்தவனை இளைய தாத்தா ஏசினாள்.

''இஞ்ச கத்தாமக் கெட'' கொள்ளை யாக் கதச்சா ஊட்டையே வரமாட்டன்.'' என்றான் ஹசன் ஆக்ரோஷத்துடன்.

இளைய தாத்தா வாயை மூடிக் கொண் டாள். வீட்டுக்கே வரமாட்டன் என்று அவன் கூறியது தாய்க்கு மேலும் கவலையேற்படுத் தியது.

''பேசாம, அவனுக்கு சோறு வெச்சுக் குடு'' என்று மகளுக்குக் கட்டளையிட்டார். அவனுக்கு நாலு வயது கூடியவள் அவள்.

அடுத்தநாள் காலை எழுந்தவனைக் காண வில்லை. ஏழு மணிக்கு சாச்சா வந்து வாசலில் நின்று 'வெல்' அடித்தார். தாய் வெளியே வர மாட்டார். மகளிடம் சங்கதிகளைச் சொல்லி அனுப்பினார்.

இவளைக் கண்டதும் ''எங்க மகள் தம்பி'' என்று வாத்ஸல்யத்துடன் வினவினார் சாச்சா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவனைக் காணல்ல. பள்ளிக்குப் போறெண்டா சைக்கில் வாங்கித் தரட்டாம்.''

''ம்ஹ்... அவ்வளவு பெரியாளாப் போனாராம? ஒங்க வாப்பா வெச்சிருந்த சைக்கிலயும் வித்துப் போட்டாங்க. இருக்கு எங்காலயாம் சைக்கில்?''

''உங்கள ஒரு சைக்கில் வாங்கிக் குடுக்கட்டாம் எண்டு உம்மா சொல்லச் சொன்னாங்க.''

சாச்சா இக் கோரிக்கையை எதிர் பார்க்கவில்லை. சற்று ஆத்திரத்துடன், ''அவர் கேட்டாப்போல நாம வாங்கிக் குடுக்கிறதா?'' என்றவர் சற்றுத் தணிந்து ''எனக்கிற்ற அதுக்கெல்லாம் வசதியிருக்கா மகள்?'' என்று அவளிடமே வினாவெழுப்பினார். 'நான் போறன் பின்னேரம் வந்து ஆளைக் கவனிச்சுக்கிறன்.'' என்றவாறு அவர் சைக்கிலை மிதித்தார்.

இச் சம்பாஷனைகள் எல்லாம் தாய்க்குக் கேட்டது. 'இவனுக்கு சைக்கில் வாங்கிக் கொடுக்க என்ன செய்யிறது. அவன் பிடிவாதக்காரன்; சைக்கில் இல்லாமல் பள்ளிக்குப் போகமாட்டான். வித்துச் சுட்டு வாங்கிக் கொடுக்கவும் ஒண்டுமில்ல.' தனது கையாலாகாத் தனம் மகனின் படிப்பையும் எதிர்காலத்தையும் பாழாக்கி விடுமோ என்று அச்சமும் கவலையும் கொண்டார் அந்தத் தாய்.

அன்று பகல் சாப்பாட்டுக்கும் அவன் வரவில்லை. மகனைக் காணாமல் தாயும் சாப்பிடவில்லை. பிள்ளைகள் எவ்வளவோ சொல்லியும் சாப்பிட மறுத்துவிட்டார். பொழுது போய்க் கொண்டிருந்தது. இராச் சாப்பாட்டுக்கு மகளை அரிசி கழுவிப் போடச் சொல்லிவிட்டு வாசற் கதவையே பார்த்துக் கொண்டிருந்தார்.

மூத்த மகள் இரண்டொரு தரம் வந்து விசாரித்து விட்டுச் சென்றாள்.

இரவு எட்டு மணியாகிவிட்டது. சின்ன மகள் 'பசிக்குது' என அழுதாள்.

''மகள் தங்கச்சிக்குச் சோறு வெச்சிக் குடுத்திற்று நீயும் திண்டிட்டு போய்ப் படுங்க'' என்று சின்னவளை வீட்டிற்குள்ளிருந்த மகளிடம் அனுப்பினார்.

''நீங்களும் வாங்களன் சாப்பிட''

''நான் மறுகா தின்னுவன் நீங்க ரெண்டு பேரும் சாப்பிட்டு போய்ப் பயெடுத்துப் போட்டுப் படுங்க'' என மீண்டும் உத்தரவிட்டார்.

மேற்கொண்டு கதைத்தால் ஏச்சுவிழும் என்ற நினைப்புடன் தங்கையைக் கூட்டிக் கொண்டு குசினிக்குள் சென்றாள் இளையவள்.

ஒன்பது மணியாகிவிட்டது. மூத்த மகள் கொட்டாவியுடன் வந்து, ''இன்னும் வரல்லய அவன்... அவன் வரமாட்டான் போல... நீங்க ஏன் குந்திக்கிடக்கியள் போய்ச் சாப்பிட்டிட்டுப் படுங்கம்மா நாங்களும் கதவப் பூட்டப் போறம்'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

ஜன்னலும் கதவுகளும் அடைக்கும் சத்தம் கேட்டது. வீடு இருளில் மூழ்கியது. விறாந்தையிலிருந்த விளக்கும் அவருமே எஞ்சியிருந்தனர்

வாசலில் நிழலாடியது. ஹசன் மெதுவாக வந்து தாயின் அருகில் நின்றான்.

''எங்க போன மகன்? இருட்டோட போன நீ எலவ? தண்ணிச் சோறுமில்ல. பகல் சோறுமில்ல. காஞ்சி கருத்து கண்ணும் தாண்டு போய் வாறாய். ஏன் பள்ளிக்குப் போனா என்ன? வாப்பா மவுத்தானதோட நீ இப்பிடி சீரளிஞ்சி திரியிறாய்'' என அவர் அழ ஆரம்பித்தார்.

''கொழறாம, சோறு தருகிலித் தாங்க. இல்லாட்டி நான் படுக்கப் போறன். பள்ளிக்குப் போகிலி சைக்கில் வாங்கித் தாங்க.''

மேற்கொண்டு கதைத்தால் சோறே வேண்டாம் என்பான் போல் தெரியவே எழுந்து சோறு வைத்துக் கொடுத்து விட்டு, தானும் கொஞ்சம் சாப்பிட்டார்.

இதே நிலை தொடர்ந்து நீடித்தது. தாயாலும் கட்டுப்படுத்த முடியவில்லை. மச்சானுக்கும் சாச்சாவுக்கும் அவன் அகப்படுவதுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் தற்செயலாக, வீட்டுக்குப் பக்கத்திலிருந்த தேநீர்க் கடை வாங்கில் இருக்கும் போது அவனை சாச்சா கண்டுவிட்டார். மெதுவாகப் பின்னால் வந்து பிடித்து இழுத்துவந்து அக்கடையில் சாத்தியிருந்த கதவுப் பொல்லால் அவனுக்கு அடித்தார். அவன் கத்திக் கொண்டு வீட்டுக்கு ஓடினான். அவர் விடுவதாயில்லை. துரத்திச் சென்று வாசலிலும் போட்டு அடித்தார்.

அவன் அடிதாங்காமல் அழுவதைச் சகிக்க முடியாத தாய் ''அடிக்காதையுங்க'' என்று அதட்டினார்.

''இவன் செஞ்சு திரியிற வேலைகள் உங்களுக்கென்ன தெரியும்... எங்கட மானம் போகுது'' என்று கூறிவிட்டு மீண்டும் அவன் முடியைப் பிடித்து இழுத்தார்.

மச்சானும் ''அடிக்கத்தான் வேணும்'' என்று அபிப்பிராயம் வெளியிட்டார். தாத்தா அதை ஆமோதிப்பது போல் நின்று கொண்டிருந்தார்.

''நாளல இருந்து பள்ளிக்குப் போவயடா? இந்த முடியை வெட்டுவயடா?'' என்று அவர் அதட்டினார். அவன் மௌனமாக நிற்கவே மீண்டும் அடிக்க ஆரம்பித்தார்.

''அவனை அடியாதயுங்க உடுங்க'' என்று தாய் தடுத்தார். தடுத்தும் அவர் விடாது போகவே, ''விடுங்க அவனை. உங்களுக்கு அடிக்க மட்டும்தான் தெரியும்'' என மகனை அவரிடமிருந்து பிய்த்தெடுத்தார்.

இதன் பின் அவன் சாச்சாவுக்குப் பயப்படுவதைவிட்டு மச்சானுக்கு மட்டும் பயந்து திரிந்தான். மச்சானிடமும் ஒரு நாள் அகப்பட்டுப் போனான். அவர் இவனைப் பிடித்ததும் ஒரு அறைவிட்டு செவியைப் பிடித்து இழுத்துச் சென்று பக்கத்திலிருந்த சீனித்தம்பியின் சலூனில் விட்டு, ''இவன் முடியை ஒட்ட வெட்டுங்க'' என உத்தரவிட்டு, வெட்டி முடியுமட்டும் அங்கேயே நின்றார்.

வெட்டி முடிந்ததும், ''போய்த் தண்ணி வாத்து தொப்பியை எடுத்துப் போடு. நாளல இருந்து பள்ளிக்குப் போகணும். தொழவும் போகணும்'' என்று கூறி வீடுவரை கொண்டு வந்து விட்டார்.

குளித்து உடை மாற்றியவன் அன்றிலிருந்து ஊரை விட்டே காணாமல் போய் விட்டான்.

□

---

மிகுந்த கால தாமதத்தின் பின் முனைப்பு-6 தங்கள் கையில் தவழுகின்றது. காலதாமதத்துக்குக் காரணம் இன்றைய சூழ்நிலையும், ஆக்கங்கள் போதியளவு கிடைக்கப்பெறாமையுமாகும்.

முனைப்பில் வெளிவரும் கவிதைகள், சிறுகதைகள் என்பன நடுவர்களால் தெரிவுக்குட்படுத்தி தொகுதிகளாக வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. கட்டுரைகளும் தொகுத்து வெளியிடப்படும் போதியளவு ஆக்கங்கள் சேர்ந்ததும் இப்பணி ஆரம்பிக்கப்படும். ஆகவே எழுத்தாளர்கள் நல்ல பல ஆக்கங்களை அனுப்பி உதவுமாறு வேண்டிக் கொள்கிறேன். ஆக்கங்கள் போதியளவு இருப்பின் மாதமொருமுறை கூட முனைப்பை வெளியிடலாம்

*வருத்தம் :* கடந்த 3! - 07 - 91 முஸ்லிம் நிகழ்ச்சியில் இலக்கியக் களஞ்சியத்தில், முஸ்லிம் சமய கலாசார இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஜனாப் **S. H. M.** ஜெமீல் அவர்கள் எழுதிய 'கடன் தீர்ந்தது' என்னும் சிறுகதையை வாசித்தவர் கையில் முனைப்பை வைத்துக் கொண்டே வாசித்தார். ஆனால், 1964 இல் வெளிவந்த மணிக்குரலிலிருந்து வாசித்ததாக 'பம்மாத்து'க் காட்டி தனது வித்துவத்தை வெளிப்படுத்திக் கொண்டார் முஸ்லிம் சேவை சிலரிடம் குத்தகைக்கு விடப்பட்டிருப்பது விசனத்துக்குரியதே.

*மிக வருத்தம் :* முனைப்பு - 5 இல் வெளிவந்த 'எனக்கு ஒரு வேலை கிடைத்தது' என்னும் சிறுகதை நல்ல சிலரின் மனதைப் புண்படுத்தியதையறிந்து மிக வருந்துகிறேன். அதிலும் குறிப்பாக பெண்களைப் புண்படுத்தியமை என் மனதுக்கு மிக வேதனை அளித்தது. 'சிறுகதை' எனக் கருதியது என் தவறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில வரிகள்......

### ஜீ. அரவிந்தன்

இந்த மாமனிதனை எம்மில் பலருக்குத் தெரியாது. இந்திய சினிமாவை சர்வதேச தரத்திற்கு உயர்த்தியதில் வங்காள உலகில் சத்தியஜித்ரோய்க்கு எந்தளவு முக்கியத்துவம் உண்டோ மலையாள உலகில் இந்த மனிதனுக்குமுண்டு. கேரள மக்களை, அவர்களின் வாழ்க்கையை, கலாச்சார மரபை சினிமாவினூடாக மற்றவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

மலையாள சினிமா உலகில் இவரின் வருகைக்குப் பின்னர் வியாபார மரபில் ஊறிய சினிமாவின் இறுக்கமான முடிச்சுகள் நெகிழ்த்தப்பட்டன அல்லது அவிழ்க்கப்பட்டன. வட்டக் கலாச்சாரங்கள் தகர்க்கப்பட்டன.

வங்க மக்களைப் போலவே கேரள மக்களும் கலை ரீதியான விழிப்புணர்வு பெற்றதற்கும், நிஜத்தைப் புரிந்து கொள்கிற மனோபாவத்தை வளர்த்துக் கொண்டதற்கும், சினிமாக்காரனைத் தலைவனாக்கிப் பார்க்கிற கீழ்த்தரமான ஆசையை அம்மக்கள் மத்தியில் அகற்றியதற்கும் இவருடைய திரைப்படங்களுக்குப் பெரும் பங்குண்டு.

இவரின் அடியொற்றி ஒரு தலைமுறை மலையாள சினிமாவில் வளர்ந்து வருவது அதீத நம்பிக்கையூட்டுவதாய் உள்ளது. வகைமாதிரிக்கு சாஜி (பிறவி) ரவீந்திரன் (ஆரோ ஒராள்) போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

ஏராளமான விருதுகள் பெற்ற இந்த மனிதரால் இயக்கப்பட்ட சில பிரபல்யமான திரைப்படங்கள் - கம்மாட்டி, உத்தராயணம், காஞ்சன சீதா, போக்கு வெயில், சிதம்பரம், ஒரிடத்து, தம்பு, வஸ்துஹாரா என்பன. இருப்பினும் இந்த மேதையை கலையுலகம் இழந்து விட்டது. எப்போழுது தெரியுமா? 1991 / மார்ச் / 15

### சி. சிவரமணி

உன்னைத் தெரிந்து கொள்வதற்கு முன்னர் உன்னுடைய கவிதைகளை வாசித்திருக்கிறேன்.

யாழ் பல்கலைக் கழகத்தின் ஒரு அலரிமர நிழலில் பேர்ட்டன் ரஸ்ஸல் பற்றிய கருத்து மோதலின் போது உனது நேரடி அறிமுகம் எனக்குக் கிட்டியது. அதற்கப்புறம் எனது இனிய நண்பர்களில் நீயும் ஒருத்தியானாய். நமது சம்பாஷணையின் போது ஹெகல், கீகேகாார்ட், ழீன் போல் ஸாத்ரே, மார்க்ஸ் என யார் யாரோவெல்லாம் வந்து போவார்கள்.

'நான்' பற்றிய கோட்பாடுகளில் மனம் கொண்ட நீ 'நான் இருக்கிறேன். ஆகவே நான் சிந்திக்கிறேன். நான் சிந்திக்கிறேன் ஆகவே நான் இருக்கிறேன்' என்ற டெகார்ட்டின் மேற்கோளை அடிக்கடி பயன் படுத்துவாய். உனக்கிருந்த ஆங்கிலப் புலமையால் உன் தேடலின் பிரமாண்டமான பரப்பு பற்றி நான் பொறாமைப் பட்டதுண்டு. அல்பர் காம்யுவின் அந்நியன் பாத்திரமே படிக்கக் கிடைத்ததென்று நான் சொன்ன போது சிசிபஸன் புராணத்தை அறிமுகம் செய்து வைத்தாய்.

மாயாகோவ்ஸ்கிக்கும் சங்கம் புழுக்கும் காதல் தோல்வி என்கிறார்கள். நீ கற்ற மெய்யியலால் வாழ்க்கையின் புதிர்களை எதிர் கொள்கிற திராணி உனக்கில்லாமல் போனதா? அல்லது அந்நியமாகாது கடந்து செல்தலில் நம்பிக்கை இருக்கவில்லையா? இன்றேல் உன் வாழ்நிலை மீதான அதிருப்தி மேலோங்கியதா? 'வாழ்க்கை பற்றிய பிரச்சனை தற்கொலை பற்றிய பிரச்னையே' எனும் அல்பர் காம்யூவின் கோட்பாடு உன்னைப் பாதித்ததா?

என்னால் இனும் நம்புவதற்குக் கடினமாயிருப்பது 1991 / மே / 19 அன்று நீ தற்கொலை செய்து கொண்டதுதான்.

- வியாபகன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதூர் - ஏ - ஹசனின்

# அநாமிகா

புதுக் கவிதைத் தொகுதி

ஒரு கவிதையைப் படிக்கும் போது, அடுத்தடுத்த கவிதைகளையும் படிக்கவேண்டும் என்ற உணர்வு ஏற்படவேண்டும். கவிதையின் கருவூலங்கள் மனதுக்கு ஏதோ ஒரு வகையில் திருப்தியைக் கொடுக்க வேண்டும். சிந்தனை தொழில்பட வேண்டும். அப்படி ஒரு நிகழ்வு அநாமிகாவைப் படிக்கும் போது ஏற்பட்டது. இன்றைய ஆயுதக் கலாச்சாரத்தை ஒரு வகையில் நான் வரவேற்கின்றேன். பலபேரை பேனா தூக்கவைத்து புதுக் கவிஞர்களாக்கியிருக்கிறது. என்றாலும் அதன் விளைவுகளை அதிக கவலையுடன் நோக்கவேண்டியுள்ளது.

மருதூர் - ஏ - ஹசன் அவர்கள் ஏதோ வரையறைக்குள் பொருத்தம் கொண்டு இந்தக் கவிதைகளை எழுதினாலும், புதுக்கவிதை என்ற நோக்கில் இவரின் உரமிட்ட கவிதைகள் கரகோசம் பெறத் தவறவில்லை. கைதட்டல் வாங்கத் தவறவில்லை. எல்லா வகையிலுமே மேம்பட்டு நிற்கின்றன. கடல்கடந்த கவிஞர்களை வழிகாட்டியாக நினைத்து செயற்பட்டு வரும் இனம் காணப்பட்ட இலங்கைப் புதுக் கவிஞர்களுடன், அதுவும் புதுக் கவிஞர்களின் வரிசையில் இவர் ஒட்டிக்கொள்வாரா அல்லது சேர்க்கப்படுகிறாரா என்பதை அம்மனத்துள் அநாமிகாவைப் பதிய வைக்கும் வேளை வெளிப்படையாகலாம். இதற்கு யாரும் சான்று கொடுக்கும் அவசியமே இல்லை போல் தென்படுகிறது.

அநாமிகா என்ற சொல்லுக்கு அர்த்தம் புரியாமல் போனாலும் 'பெயர் இல்லாததற்குப் பெயர்தான் அநாமிகா' என்று புரியக்கூடும் வகையில் அவரின் அநாமிகா என்ற கவிதை தெளிவுபடுத்துகின்றது. காதல் கவிதைகளை பார்க்கும் வேளை இந்த அநாமிகா என்ற கவிதையில் வரும் வரிகள்

'போர்களத்தில்
சிந்தும்
இரத்தத் துளிகளை விட
பெறுமதியானது
காதலர்களின்
முத்தங்கள்'

காதலை கனதூரம் மேன்மைப்படுத்துகின்றது. இன்னும் பல காதல் கவிதைகள் இடம்பெறுகின்றது.

கண்ணுக்கு முன் நடப்பவற்றை பார்த்துக் கொண்டு தவிர்க்கமுடியாதபடி இருந்தாலும், அவை சாகாமல் இருக்க, சளைக்காமல் சில கவிதைத் தொகுதிகளைத் தந்துள்ளார். இது அவருக்குரிய தனித்துவம். இந்த வகையில் யுத்தம், பீதி, அனர்த்தம், கோபம், விபரீதம், கஷ்டம், மகிழ்ச்சி என்பவைவற்றை முதன்மைப்படுத்தி ஆழமாக எல்லோரையும் ஆகர்சிக்கக்கூடிய வகையில் சம காலத்தில் ஏற்பட்ட மனப் பதிவுகளை மனம் திறந்து அழகாகச் சொல்லுகின்றார்கள்.

அநாமிகாவுக்கு அழகாக, அடக்கமாக, ஆழமாக விடயங்களை தெளிவுபடுத்திக் கூறியுள்ள கலாநிதி எம். ஏ. நுஃமான் அவர்களின் முன்னுரை கவனத்தை ஈர்க்கக் கூடியது. ஆனால் அநாமிகா ஆசிரியரின் நான் என்ற உரைத் தொடர் வித்தியாசப்பட்டு 'நானா' கவே இருக்கிறது. ஆசிரியர் ஓய்வு கிடைக்கும் போது அதைப் படித்துப் பார்க்கவும்.

கவிஞர் மு. மு. மு. பாசிலின் அழகான அட்டை அமைப்புடன் கவிஞர் மேமன் கவியின் முன்குறிப்போடு கலைஞர் மருதூர் - ஏ - மஜீத் அவர்களின் வெளியீட்டுரையோடு வெளிவந்துள்ள இக் கவிதைத் தொகுதியில் ஆக மொத்தம் 27 கவிக் குழந்தைகள் பிரசவிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை யுத்தம் நடக்கிறது மகனே நீ வெளியே போகாதே, 11 - 06 - 1990 காலை கறுப்பு ஜூனும் சிவப்பு 11 ம், கல்முனைக்கு நீ தயவுசெய்து வரவேண்டாம், நானும் வருகின்றேன் உனக்குப் பக்கத்தில், அடுத்த நூற்றாண்டு, அநாமிகா, மன்னார் + மக்கள் = அகதிகள், கனதூரமில்லை, அந்த அழகி தட்பியிருப்பாள், சிவப்பு வார்த்தைகள்.

மருதூர் வெளியீட்டுப் பணியகத்தின் முதலாவது வெளியீடான அநாமிகாவின் விலை 30 ரூபா. தொடர்புகளுக்கு மருதூர் - ஏ - ஹசன் 408, மாவடி வீதி, சாய்ந்தமருது - 01.

- றகுமான் - ஏ - ஜப்பார் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையின்திறம்...

## மருதூர்பாரி

அவர் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார். அவன் வழிக்கு வருவதாயில்லை. சலீ கந்தோர் அருகில் வந்ததும் சைக்கிளை ஓரமாக வைத்துப் பூட்டிவிட்டு உள்ளே சென்று விட்டான்.

அவர் வெகுநேரமாக வெளியில் நின்று பார்த்தார். சலீம் வெளியே வருவதாக இல்லை. நடராசாதான் "என்ன அணஞ்சிற்ற?" என்று கேட்டவாறு வெளியே வந்தான்.

"சி... பொடியன் பொறுப்பான ஆளா இருப்பான் போல இருக்கு" என அவர் அலுத்துக் கொண்டார்.

"பொறுப்பான ஆள்தான். இன்னும் றை பண்ணிப் பாருங்க."

"எனக்கு நம்பிக்கை இல்ல தம்பி. அந்தப் பொடியன உட்டுட்டு நாமதான் முன்ன மாதிரி இல்லாம கொஞ்சம் துப்பரவா செய்தெடுக்க வேணும்" என்று கூறியவர் "வாங்க டீ அடிச்சிற்று வருவம்" எனக் கூறியவாறு கடையை நோக்கி நடந்தார்.

தேனீர் குடிக்க வெளியே வந்த நடராசாவுக்கு, 'ஓசியில்' டீ, பெற்றீஸ், சிகரட் எல்லாம் கிடைத்தன.

"துப்பரவா செய்யுறெண்டா அது நம்மளால முடியாது. பெரியவர் செய்ய வேணும். இல்லாட்டி சலீம்தான்... இரண்டு பேரும்தான் எம்போசத் தொடலாம். பெரியவர நெருங்கேலா... சலீமைத்தான் வளைச்சிப் போடுங்க."

'எர்டோனை' தொடும் தகுதியை சலீமும் இழக்க வேண்டும் என்பது நடராசா முதலியவர்களின் விருப்பம். ஆகவே, சலீமையும் தமது குட்டையில் இழுத்துப் போட அவன் பல தடவை முனைந்தான்.

"முதல்ல கொஞ்சம் பெரிய இரையாப் போட வேணும். மறுகா போகப்போக சின்ன இரைக்கே கொழுகும்" என்று தன் அனுபவத்தைச் சொல்லி விட்டு அவன் சென்று விட்டான்.

'இவனை எப்படி மடக்கலாம்?' என்று சிந்திக்க முனைந்தவருக்கு சலீமுக்கும் வாச்பேக்கருக்கும் நடந்த உரையாடல் ஞாபகத்துக்கு வந்தது. 'சரி நாளைக்குப் பார்ப்போம்' என்றவாறு வீட்டுக்குப் புறப்பட்டார்.

## 5

கந்தோரிலிருந்து வீட்டுக்கு வந்த சலீம் திண்ணையில் தனது மூத்த மகள் தங்கையுடன் ஒரு பொம்மைக் கார் வைத்துக் கொண்டு விளையாடுவதை அவதானித்தான்.

இவனைக் கண்டதும் மகள், "வாப்பா... வந்திற்றாங்க" என்று குசினியிலிருக்கும் தாய்க்குக் கேட்பதற்காக கத்தி விட்டு தனது காருடன் தந்தைக்குப் பின்னால் ஓடினாள். தங்கையும் பின்னால் சென்றாள்.

உடை மாற்றிய சலீம் தனது சட்டைப் பையிலிருந்து ஆளுக்கொரு டொபியை எடுத்துக் கொடுத்து விட்டு, "ஏது மகள் கார்?" என வினவினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மாமி தந்த.''

''ஆரு மகள் மாமியெண்டா.''

''அங்க... இருக்காங்க... மாமி... வெளி நாட்டுக்குப் போன... நானும் உம்மாவும் போன... அவிய தந்தாங்க'' என்று ஏதோ சொன்னாள் மகள்.

மகள் கூறுவதைக் கேட்டுக் கொண்டே வந்த நிசா, கொண்டு வந்த தேனீரை கணவனிடம் கொடுத்து குடித்து முடியுமட்டும் காத்து நின்றவள், கொஞ்சம் விளக்கமாகச் சொன்னாள்.

''பௌசியா கூப்பிட்டு அனுப்பினா. நாங்க போய் வந்த... வேணா வேணா என்ன இதக் குடுத்திற்றா.'' தான் கூறும் போது அவன் முகம் போன போக்கைப் பார்த்ததும் சட்டென, ''போனதும், வந்ததும்தான்'' என்றாள்.

ம் கொட்டியதுடன் சின்ன மகளைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு சாய் மணையில் சாய்ந்தான் சலீம். பெரியவள் அருகில் சென்று, ''எவ்வளவு சாமான் வாப்பா. மாலை... காப்பு... மணிக்கூடு... சட்டை... பொடவ... கார்... ஜீப்... எவ்வளவு சாமான்... மாமி இத மட்டும்தான் தந்த'' என்று மழற்றினாள்.

''அவ உனக்கு மாமியா மகள்.''

''ஓ!... உம்மா சொன்ன.''

''ம்... புது உறவெல்லாம்...'' என்று பெருமூச்சு விட்டான்.

''உறவு கிறவு இல்ல. ஆரும்மா எண்டு இவ போட்டுத் தொளச்செடுத்தா... சும்மா மாமி எண்டு செல்லி வெச்சன்'' என்று கடுகடுத்தாள் நிசா.

''அவ கூப்பிட்டனுப்பினா... நாம போறதான?'' என்று மெதுவாகத் தனக்குள் பேசிக் கொள்வதைப் போல் கேட்டான்.

''என்னமாம் போனா?... மனிசன்மக்களப் பாக்காம இந்த ஊட்டுலய அடஞ்சி கெடக்கிறத? சிரித்துக் கொண்டே இதைக் கேட்க வேண்டுமென நினைத்தவளுக்கு சிரிக்க முடியவில்லை.

''அடஞ்சி கெடக்கச் சொல்லல்ல. போறத்துக்கும் வாறத்துக்கும் ஒரு அர்த்தம் வேணும்... உறவு வேணும்... வேல வேணும்...''

''அர்த்தமில்லாமய?... அவ என்ர சின்ன வயசுக் கூட்டாளி.''

''ஆ... கூட்டாளியெண்டாச் சரிதான். ஆனா... அவ வெளிநாட்டுக்குப் போய் வாறத்துக்கு முன்னே அந்தக் கூட்டாளித்தனம் எங்க போன?... நீங்க அங்க போய் வந்ததாக எனக்கு ஞாபகமில்லையே'' என்று குறுஞ்சிரிப்போடு அவன் கேட்டதும் அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

''அந்நேரம் போகத் தோதுப்படல்ல. இப்ப போனன்... என்னமாம்?'' என்று சமாளித்தாள்.

''நல்லம்தான்... வேறெண்ணம் புடிச்சிப் போயிருந்தா...'' என பேச்சை இழுத்தான்.

''வேறெண்ண மென்டா?'' - நிசாவுக்கு ஆத்திரம் வரும் போல் இருந்தது.

''ஒண்டுமில்ல...'' என்றவன், மகள் பக்கம் திரும்பி, ''நீ சொல்லு மகள்... மாமிற்ற வேறென்ன கண்ட?'' எனப் பேச்சை மாத்தினான்.

மகளும், ''வேற...வேற...'' என யோசிக்க முற்படுகையில், ''சும்மா கெட'' என தாய் அதட்டவே நிறுத்திக் கொண்டாள்.

''ஏன் அத உறுக்கிறயள்?'' என சிரித்துக் கொண்டே மனைவியிடம் கேட்டான்.

''நீங்க அவக்கிட்ட தோண்டித் தோண்டிக்கத எடுங்க... நான் போறன்'' என்று கூறிவிட்டு குசினிக்குள் சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனும் எழுந்து வெளியே போகப் புறப்பட்டான்.

அவனுக்கு யோசனையாய் போய் விட்டது. ஒரு நாளுமில்லாமல் மனைவி வெளி நாட்டுக்குச் சென்று வந்தவர்களுடன் உறவாட முனைவதை நினைத்து சற்றுக் கவலை கொண்டான்.

மெதுவாக நடந்து கடற்கரையை அடைந்தான். அவன் சின்ன வயதில், விசாலமாகக் கிடந்த மணற்பரப்பு இப்போது குடியிருப்புக்களால் ஒடுங்கிக்கிடந்தது. கடலும் கொஞ்சம் வளர்ந்து வந்த பாதிரியிருந்தது. நல்லவேவளை மீன்பிடி இலாகா போட்ட வீதி, குடியிருப்பை எல்லைப் படுத்தி விட்டது. அப்படியும் சில அத்து மீறல்கள்.

கடற்கரை நெடுகிலும் இரண்டும் மூன்றும் நான்குமாகத் துண்டு துண்டுக் கூட்டங்கள். சலீம் தனிமையை நாடி, அலைவாய்க்கரையில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த தோணியருகில் சென்றமர்ந்தான்.

கிடைக்கும் சம்பளத்தோடு மட்டும்தான் அவன் வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது. காரியாலயம் விட்டு வர ஐந்து மணியாகி விடும். அதன் பின் அவனுக்கு வருவாய் தேடும் வழிகள் இல்லை. கந்தோரிலும் மற்றவர்களைப் போல் தினமும் ஐந்தும் பத்தும் ஐம்பதும் நூறும் தேட மனச்சாட்சி விடுவதில்லை. விரும்பித் தரப்படுபவற்றையும் நிராகரித்து விடுவான். வெளியில் அவனுக்குக் கிடைக்கும் உபசரிப்புக்கள் மட்டும் தான் போணஸ். கஷ்ட ஜீவனம்தான். ஆனால் சமாந்தர சீவியம்.

மணலில் கிடந்த சிப்பிகளைப் பொறுக்கி அலையில் விட்டெறிந்தவாறு சிந்தித்துக் கொண்டிருந்தவனை பின்னால் எழுந்த கேள்வி சுதாகரிக்கச் செய்தது.

''என்னடப்பா ஏகாந்தமாய் வந்து குந்தியிருக்கிறாய்?''

திரும்பிப் பார்த்தவன அனஸ் மாஸ்டர் நிற்பதைக் கண்டான்.

''ஒண்டுமில்ல... சும்மா இருக்கன்... இரியன்.''

''கடும் யோசனல இருந்தாய். சும்மா என்று சொல்றாய்... சொல்லன். நானும் ஏதாவது ஹெல்ப் பண்ணலாமா எண்டு பாப்பம்'' என்றவாறு அனஸ் அமர்ந்து கொண்டான்.

''நம்மட சம்பளத்தையும்... குடும்பச் செலவுகளையும் பற்றித்தானே யோசிச்சுக் கொண்டிருந்தன்.''

''வாழ்க்கைச் செலவுகள் போற போக்குக்கு உன்ர சம்பளம் எந்த மூலைக்குக் காணும். உனக்கு வேற என்னமாலும் சைற் பிசினஸ் பார்க்கிறதுக்கும் நேரம் வறல்ல. நாம வாங்கிற சம்பளம் தொடுக்கேலா. அதுக்குள்ள நீ பிரசண்டா தாற காசையும் வாங்க மாட்டயாம் அப்ப எடபிடி'' என சிறு பிரசங்கமே செய்தான் அனஸ். இருவரும் வகுப்புத் தோழர்கள். சலீ O/L உடன் நின்று விட்டான். அவன் இப்போ பட்டதாரி.

''பிரசண்ட் எண்டா பந்தம் இல்லயா?''

''என்ன பந்தம்? இவ்வளவு தந்தாத்தான் செய்படும் எண்டாத்தான் பந்தம். வந்த வேல கெதியா துப்பரவா முடிஞ்சா வர்ற சந்தோஷத்தில ஒருவன் விரும்பிய தொகைய தந்தா அது பந்தமா? நாம சட்டத்துக்கும் சம்பிரதாயத்துக்கும் முரண்படாம வழமை போல செய்யுற வேலல அவன் திருப்திப்பட்டுத் தாற Gift பந்தமில்ல. அது அவனது வெகுமதி.''

''அப்பிடி வாங்கினா மறுகா, கேட்டு வாங்கிற மனம் வந்திரும். அதான் பயம்.''

''எல்லாம் நாமதான். நம்மட மனத்த நாமதான் அடக்கவேணும். எதிர்பார்ப்புடன் செய்தாத்தான் பிழை. எல்லோரும் வலியத் தரமாட்டான். ஒண்டு ரெண்டுபேர் தருவான். அவனுக்கும் அது நட்டமில்ல. நாலு நாள் அலையுற விஷயம் ஒரு நாள்ள முடிஞ்சா அவனுக்குச் சந்தோஷம் வரும்தானே.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீயும் இப்பிடிச் சொல்றாய். உன்ன முற்போக்காளன் யதார்த்த சிந்தனையாளன் என் பாங்க...'' என்று புன்சிரிப்போடு இழுத்தான்.

''இதென்ன யதார்த்தமில்லய? காசும் மனமும் இருக்கிறவன் தர்ரத. வலியதர்ரத... சும்மா சந்தேஷம் எண்டு நினைத்து வாங்கலாம் எண்டுதான் சொல்றன்'' என்று கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டுக் கூறினான்.

''எண்டாலும்...'' என சலீம் இழுக்கவே, அவனுக்கு கோபம் வந்துவிட்டது.

''அப்ப பெண்டாட்டிய வெளிநாட்டுக்கு அனுப்பு. இல்லாட்டி நீ போ.'' என்றான்.

இதைக் கேட்டதும் சலீம் அதிர்ந்து போனான் தனது மனைவியும் வெளிநாட்டுக்குப் போக முடிவெடுத்து விடுவாளோ என்று அவன் மனத்தில் புழுவாய் நெழிந்த சந்தேக இப்போது விசுவரூபமெடுத்தது. மௌனமானான்.

சில வினாடிகள் கழிந்தன. அனசும் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

இருள் கவியத் தொடங்கியது. குளிர் காற்றும் வீசியது. ''சரி... எழும்பு போவம்'' என்றவாறு அனஸ் எழுந்து கையிலிருந்த மணலைத் தட்டிவிட்டான். சலீமும் எழுந்து நடக்கத் தொடங்கினான்.

''அப்ப பெண்டாட்டிய அனுப்பப் போறய... இல்ல நீ போறய?'' நடந்து கொண்டே கேட்டான் அனஸ்.

''பெண்டாட்டிய... வெளிநாட்டுக்க... சி...''

''அப்ப நீ போ. நானும் கொஞ்சம் காசு தந்து ஹெல்ப் பண்ணுறன்.''

''பெண்டாட்டியையும் அனுப்பேலா. பெண்டாட்டி புள்ளயள தனிய விட்டுட்டு நானும் போகேலா.''

''ஏனாம்?''

''ஏன?... இந்த ஊர் உலகத்தில நடக்கிற சங்கதிகள நீ கேள்விப்படல்லய?...''

''ஒத்த செத்த தவறா நடந்தா... எல்லாம் அப்படித்தான?''

''அதெல்லாம் விசப் பரீட்ச... கலியாணம் முடிக்கத்தக்கு முந்தியெண்டா நான் போயிருக்கலாம்... இப்ப சரிப்பட்டு வராது.''

''உனக்குப் பெண்டாட்டியில நம்பிக்கை இல்ல போல.'' என்று சிரித்தான் அனஸ்.

''தேவ இல்லாத கத கதையாத.'' என்று சற்று ஆத்திரத்துடன் கூறிய சலீர், ''நம்பிக்க இருக்கோ இல்லயோ, பெண்டாட்டிய அனுப்பி அவ யார் யாருக்கெல்லாமோ கொத்தடிம வேல செஞ்சி காசனுப்ப அத நான் அனுப்பவிக்கவ?... நான் ஆம்பிள.'' என்று மார் தட்டினான்.

''அப்ப என்ன செய்யப்போறாய்?''

''செய்யுற என்ன? வெளிநாட்டுக்குப் போகாத குடும்பம் வாழல்லய? சனி ஞாயிறுல நெசவப் போறன். இரவல A/L படிக்கப் போறன்... அதுக்கு நீ ஹெல்ப் பண்ணன்.''

அவன் முடிவைக் கேட்டு ஆச்சரியப்பட்ட அனஸ் உற்சாகமாக, ''ஓ!... அதுக்கென்ன... A/L நோட்ஸ், புத்தகமெல்லாம் சேத்துத் தாறன்... படி. சந்தேகமிருந்தா வந்து கேளு. மனம் வெச்சுப் படிச்சா ஒரு வருசத்தில பாஸ் பண்ணிரலாம். படிக்கக்குள்ள நான் எவ்வளவு தெண்டிச்சுப் பார்த்தன்... A/L படிரா படிரா என்று. நீ JOB க்கு அலைஞ்சாய்... இந்தப் பியோன் வேலய எடுத்தாய்... இப்ப அல்லாடுறாய்... பாஸ் பண்ணினா வேற வேல எடுக்கலாம்.'' என்றவன் சற்றுத் தாமதித்து, ''நெசவப் போறதெல்லாம் சரிவருமா? ஆரு உனக்கு தறி தாற?'' என்று கேட்டான்.

''பாப்பம்'' என்று கூறிய சலீம் மௌனமாக நடந்தான். எதிரில் வந்த சந்தியில் இருவரும் பிரிந்தனர்.

வீட்டுக்குச் சென்ற சலீமுக்கு, வீட்டுப் படியில் கிடந்த செருப்புக்கள் புதியவர்கள் வந்திருப்பதை அறிவித்தன.

(வரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாளும் - ஒவ்வொரு நாளும்

- எம். எம். நௌபாத் -

எங்கட தாத்தாவுக்கு அளுப்பொத்த ஸ்கூலுக்கு ரீச்சர் வேலை கெடச்சி மூணு மாசத்துக்கும் கூடப் பெயித்து........

அங்க சரியான பயமாம். ஸ்கூலுக்குப் போறது எண்டாலே பயம்தானாம்...... பட்டப் பகல்ல அவனுகள் ஒண்டும் செய்யமாட்டானுகளாம்...... ராவக்கித்தான் ஒரே குண்டு வெடிக்கிற சத்தமும், சுடுகிற சத்தமும்...... வாழ்க்கையை வாழுணும் எண்டா உசிரக் கையில புடிச்சிக் கொண்டுதான் இருக்க வேணுமாம்......

தாரும் கட்சிப் பேச்சு பேசக்கூடாதாம்... கட்சிப் பேச்சி பேசினா 'பொட்...பொட்...' என்று சுட்டுப் போடுவானுகளாம்...... ஆறு மணியானா ஒத்தரும் ஒண்டும் பேசப்படாதாம்... லாம்பையும் பணிச்சுத்தான் வெக்க வேணுமாம்...... லைட் போட்டு சந்தோஷமா இருந்தா அவங்களையும் 'பொட்...பொட்' என்று சுட்டுடுவானுகளம்...... ராவக்கி கறி ஆக்கிற நேரம் கூட கொச்சிக்கா எங்க இருக்கு எண்டு சாச்சிக்கிட்டயோ உம்மாக்கிட்டயோ காதுக்குள்ள ரகசியம் பேசித்தான் கேட்க வேணுமாம்......

ராவக்கி நாய் கொலைச்சா அது சுவரா மூணு எழுத்துத்தானாம்... ஒரொரு நாளும் எனத்துக்குத்தான் வாரானுகள் எண்டு தெரியாதாம்...... எவ்வளவுதான் காடா இருந்தாலும் இப்ப பிசாசி எண்டா பயமே இல்லையாம்...... எனக்கெண்டா பிசாசிக்கு சரியான பயம்...... அதுகள் எறச்சி மணம் அடிச்சாத்தான் கிட்ட வருமாம்...... மூணு எழுத்து அப்பிடி இல்லையாம்... கண்ட உடனே சந்தேகத்தில 'பொட்...பொட்' எண்டு சுட்டுப் போடுவனுகளாம்......

அவனுகளுக்கு பணக்காரன் எண்டா புடிக்கவே புடிக்காதாம்... அவங்களுக்கிட்ட சல்லி எவ்வளவு கேட்டாலும் குடுக்க வேணுமாம்... பேங்க் புஸ்தகத்தில எவ்வளவு இருக்கு எண்டு காட்டச் சொல்லுவானுகளாம்... அதில எவ்வளவு இருக்கு எண்டு பார்த்து அதில முக்காவாசிய கேட்டு எடுப்பானுகளாம்...... தர மாட்டன் எண்டு சொன்னா அவங்களையும் 'பொட்...பொட்...' எண்டு சுட்டுப் போடுவானுகளாம்......

இது எல்லாம் செய்யிரதாரு எண்டே தெரியாதாம்... ஒரு ஆள் ஒண்டு சொன்னா மத்த ஆள் இன்னொண்டு சொல்லுவாராம்... இப்ப ஒரொரு ஆக்களும் ஒரொரு பேரில என்னன்னமோ செய்யிறானுகளாம்... ஒரு ஒரு பேரில சேர்ந்திருக்கிறவன கண்டாலும் 'பொட்...பொட்...' எண்டு சுட்டுப் போடுவானுகளாம்......

ஒங்களுக்குத் தெரியுமா போன பயணம் எலக்ஷன் நடந்ததுதானே அய்(து) நேரம் தொண்ணூத்தி ரெண்டு மரங்கள வெட்டி நடுரோட்ல போட்டிருந்தானுகளாம்... அதுவும் ஒரு ராவையில வெட்டிப் போட்டிருந்தானுகளாம். உம்மாடியோவ்...... எங்கட நானா ஒரு கம்பு வெட்டவே எவ்வளவு நேரம் எடுக்கும் தெரியுமா...? எனக்கு மண்ணால பாத்தும்மா... கதிஜா... நௌஸா எல்லாரோடையும் சோறாக்கி விளாடக் கூட கம்பு வெட்ட மாட்டன்... சரியான கஷ்டம்... அவனுகளுக்கிட்ட கரண்ட் வாள் இரிக்காம்... அதால சுறுக்கா மரம் வெட்ட ஏலுமாம்... எனக்கும் அப்பிடி ஒரு வாள் இருந்தா சந்தோஷமா கம்பு வெட்டி, மண் சோறாக்கி, குடில் கட்டி விளாடுவேன்......

அளுப்பொத்த ஒரு சின்ன ஊருதான்... சம்மாந்துறைல இருந்து அளுப்பொத்தைக்கு

போறெண்டா எப்பிடிப் போகவேணும் தெரியுமா...? அம்பாரைக்குப் பெய்த்து அங்க இருந்து மொன்றாகலைக்குப் பெய்த்து அங்க இருந்து பதுளை பஸ்ஸில அளுப்பொத்தைக் குப் போக வேணும். எனக்கு அளுப்பொத் தைக்குப் போறெண்டா சரியான ஆச...... என்ன வாப்பாதான் கூட்டிக் கொண்டு போவாரு... இப்பவும், நானும் வாப்பாவும் அளுப்பொத்தைக்கு போப்போறோம்... அங்க தான் எங்க உம்மாட ஊரு. நானும் அங்க தான் பொறந்தேனாம்... உம்மா சொல்லு வா... அங்கதான் எனக்கு உம்மம்மா இரிக்கி, சாச்சி இரிக்கி, மாமா இரிக்கி, அவங்களோட எனக்கு சரியான விருப்பம்... உம்மம்மா சாச் சியெல்லாம் என்னக் கண்ட ஒடனே மோந்து கொள்ளுவாங்க... தாத்தாவும் அங்கதான் இரிக்கா......

நாங்க ஏ(ன்) அளுப்பொத்தைக்கு போப் போறோம் தெரியுமா...? போன கெழம அடுப் புக்கல் வந்து,...அடுப்புக்கல் எண்டா!... மூணு எழுத்து... மூணு எழுத்தெண்டா அவனுக ளுக்கு இப்ப வெளங்குதாம்... அதுக்குத்தான் அடுப்புக்கல் எண்டு சொல்றதாம்... அவனுகள் வந்து ஜௌபர் அங்கிளையும், மஜீத் அங்கி ளையும் 'பொட்...பொட்...' எண்டு சுட்டுப் போட்டுப் பெய்த்தானுகளாம். றகிம் அங்கிள் ளையும் கைய கெட்டிப் போட்டு வெச்சாம்... அவரு கண்ண மூக்கப் பாத்து காட்டுக்குள்ள ஓடிப்பெய்த்தாராம்... இல்லாட்டி அவரையும் 'பொட்...பொட்...' எண்டு சுட்டுப்போட்டி ருப்பானுகளாம்... மாமாதான் நேத்து டெலி போன் பண்ணிச் சொன்னாரு......

அளுப்பொத்தையெல்லாம் சரியான பர பரப்பா இரிக்காம்... ஜௌபர் அங்கிளையும், மஜீத் அங்கிளையும் சுட்டது 'ரீ பணஸ்ஹபா' வாலதானாம். எனக்கெண்டா கொக்குச் சுடு றதத்தான் நல்லாத் தெரியும்... முந்தி எங்கட மாமா நான் பாத்துக்கொண்டு நிக்கிற நேரம் புறா சுட்டு இரிக்காரு... இப்ப அவருக்கிட்ட அது இல்ல... அத அரசாங்கம் பறிச்சிட்டு... 'ரீ பணஸ்ஹயா'வாலதான் மனிசன 'பொ... பொட்...' எண்டு சுடுறதாம்... ஏயோ(னோ) தெரியா கொக்கு சுடுறது எல்லாத்தையும் பரிச்சிட்டு மூணு எழுத்துக்கிட்ட மனிசன 'பொட்...பொட்...' எண்டு சுட்டுப் போடுற ரீ பணஸ்ஹயாவ கொடுத்திருக்கு... அதையும் பறிச்சி எடுத்தா பயம் இல்லதானே... நான் அளுப்பொத்தைக்குப் பெய்த்து அடுப்புக்கல்ல கண்டா ஏ(ன்) நீங்க எல்லோரையும் 'பொட்... பொட்...' எண்டு சுடுறீங்க எண்டு கட்டாயம் கேக்க வேணும்... கேக்கச் சொல்ல என்னையும் 'பொட்...பொட்...' எண்டு சுட்டுட்டான் எண்டா... உம்மா எனக்கெண்டா ஏலா...... நான் கேக்க மாட்டன்... எனக்குப் பயம்......

அளுப்பொத்தைக்கு போறதுக்கு இன்னம் மூணு மைல்தான் இரிக்கி. எல்லா பஸ்ஸும் ஏயோ(னோ) தெரியா படல்கும்பறயில நிண்டு போற... இங்கினிக்கி நிண்டா எனக்கு சரியான கோவம்... பஸ் நிண்ட கைக்கி ஜனம் ஓடி வந்து அடைச்சிடும். மூச்சி உடுற எண்டா லும் சரியான கஷ்டம்... அது மட்டுமா எல் லாருக்கும் வேருத்து, பாக்கவே ஒரு மாதிரியா இருக்கும்... இந்த படல்கும்பறயில இருந்து பஸரா போற வரைக்கும் சரியான கஷ்டம்... ரெண்டு ஊருக்கும் எடையில தான் அளுப் பொத்த இரிக்கி......

பஸ்ஸ ஸ்டார்ட் பண்ணிட்டான். எனக்கு சரியான சந்தோஷம்... வாப்பாவ காணல்ல. எனக்குத் தெரியும், இந்த வாப்பா எப்பவும் இப்பிடித்தான்...பஸ் நிண்டா எறங்கிடுவாரு... பஸ் ஸ்டார்ட் பண்ணின கைக்கு கிட்ட இரிக் கிய தேத்தண்ணிக் கடையில இருந்து ஓடி வந்து ஏறிக்கொள்வாரு... கையில சொகோ மோல்ட் இல்லாட்டி டெல்டா மோல்ட் இரிக் கிம்... வாயில பிரிஸ்டல் ஒண்டு பத்திக்கிட்டு இரிக்கும்... இண்டைக்கும் அப்பிடித்தான் ஏயோ(னோ) தெரியாது இண்டைக்கு டொபி வாங்கிக் கொண்டு வந்திருந்தார்......

பஸ் போகுது... இன்னம் பதினஞ்சி நிமி ஷத்தில அளுப்பொத்த பெய்த்து சேந்திடும்... அங்க சந்தியில... ஒங்களுக்குத் தெரியுமா? அளுப்பொத்தைக்கு மெயின் ரோட்டில இருந்து அர மைல் நடந்து போக வேணும்... சரியான சௌப்பு... நடக்கவே ஏலா... முந்தின காலத் தில அப்பிடி இல்லையாம்... இந்த வெள்ளக் காரன் றப்பர் தோட்டம் போட்டதால ரோட்ட இஞ்சால மாத்திட்டானாம்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாப்பாதான் எனக்குச் சொன்னார்... வெள்ளக்காரனுக்கு அளுப்பொத்தையோட மட்டும் கோவமாயிருக்கும்......

இந்த பஸ்ஸ காத்துக்கொண்டு அளுப்பொத்த சந்தில கொறஞ்சது இருபத்தஞ்சி பேராவது இருப்பாங்க. அளுப்பொத்த சந்தில இருந்து பஸ் ஏறுறது எண்டா ஒரு மணித்தியாலமாவது காத்துக் கொண்டு இரிக்க வேணும்... இலங்கையிலே மிச்ச நேரம் பஸ்ஸுக்காக காத்துக் கொண்டு நிக்கிற எடம் அளுப்பொத்தையாத்தான் இரிக்க வேணும்...

பஸ் நிண்டுட்டு... எனக்கு சந்தோஷம் பொறுக்க முடியல்ல... பேக்கையும் தூக்கிக் கொண்டு எறங்கினேன். வாப்பாவும் என் பின்னால எறங்கினார். ஒரு அதிசயம்... சந்தில பஸ்ஸுக்கு ஒத்தரையும் காணல்ல... நான் பொறந்த ஒன்பது வருஷத்துக்கும் மொத மொத இப்பதான் அளுப்பொத்த சந்தில ஒத்தரையும் காணல்ல... வேணுமெண்டா செம்பகம் ஒண்டும் காட்டுக் குருவிகளும் இன்னம் கொஞ்சம் பறவைகளும் நாயொண்டும் தான் சந்தில இரிக்கி......

பேக்கத் தூக்கிக்கொண்டு நடக்க வேணும் அரவாசி ரோட் சரியான ஒசரம் - அரவாசி ரோட் சரியான பள்ளம்... ஏறி எறங்கிச் செல்லவே சீவன் பெய்த்திடும். இந்த ரோட்ல நடக்கச் செல்ல எனக்கும் அந்த வெள்ளக்காரனோட சரியான கோவம்... ஆனாலும் ஊர் வந்த சந்தோஷத்தில பேக் பாரமும் வெளங்கல்ல... சௌப்பும் வெளங்கல்ல... எப்படிச் சரி டக்கெண்டு ஊட்டுக்குப் பெய்த்து சேர வேணும்......

எல்லாத்தையும் பாக்க போகச் செல்ல ஒரொரு ஊட்டு முத்தத்திலயும் (முற்றம்) நிண்டு கொண்டு,

'இப்பவா சம்மாந்துறையில இருந்து வாறீங்க?......'

'உம்மாவும் வாறாவா?......'

'வாப்பாவோடயா வாறீங்க?......'

'சம்மாந்துறையில பிரச்சினையாமே?...'

'ரீவில சம்மாந்துறைய காட்டினாங்களே......'

'அங்க தமிழ் முஸ்லிம் கொளப்பமா......'

'தாத்தாவ கூட்டிக் கொண்டு போவா வாறீங்க?......'

இப்படி ஆயிரம் கேள்வி கேட்டு, அவங்களுக்கு பதில் சொல்லியே மிச்சம் இருக்கிற சீவனும் பெய்த்திடும்... ஊட்டுக்குப் பெய்த்து சேர எடயில சம்மாந்துறை சரித்திரத்தையே அறிஞ்சிடுவாங்க. கொறஞ்சது எங்கட குடும்ப விஷயமாவது அவங்களுக்குத் தெரிய வேணும்... அது போதாதெண்டு ஆம்பிளையளும் அப்பிடித்தான்......

உம்மாடி... ஒசக்க (உயரத்தில்) ஏறியாச்சி... இனி பள்ளம்தான்... பள்ளத்தில போற வேகத்திலேயே எல்லாரும் கேட்கிற கேள்விக்கு பதில் சொல்லிக் கொண்டு போக வேணும். வாப்பா மெல்ல மெல்லத்தான் (மெல்ல மெல்ல) வருவாரு. நான் முந்தி ஓடிப் போறதால எல்லாருக்கும் நான்தான் பதில் சொல்ல வேணும். வாப்பாக்கிட்ட பொம்பிளயல் கதைக்கவும் மாட்டாங்க... ரிபா ரீச்சர் கண்டா மட்டும் இரிக்கக் கூப்பிடுவா. மத்தாக்கள் ஒரு சிரிப்போட சரி......

ஊடுகள் ஒன்றொன்றாகப் போகுது... ஊட்டு முத்தத்தில ஒத்தரையும் காணல்ல... செல (சில) ஊடுகள்ள மட்டும் நிண்டாங்க... அவங்க எனக்கிட்ட ஒண்டுமே கேக்கல்ல... ரிபா ரீச்சரும் ஒரு சாதாரண சிரிப்போடு தலையாட்டினா... அஜிம் அங்கிள், நிஸா அன்ரி இவங்களும் இப்படியே ஒரு சிரிப்பு.. எனக்கெண்டா ஒண்டும் வெளங்கல்ல... எல்லாருக்கும் அப்ஸட்டா, எல்லாமே ஒரு ஜாதியாயிரிக்கி... அளுப்பொத்தையே மாறிப் பெயித்து... நான் முந்தின பயணம் வந்தநேரம் இருந்த சந்தோஷம் இப்ப இல்ல. பேக் சரியான பாரமா இரிக்கி. நடக்கக்கூட சௌப்பா இரிக்கி......

ஊடு வந்திட்டு, சாச்சி நிக்கிறா, அவவும் சும்மா சிரிச்சா... 'வா...' எண்டு கூப்பிட்டா. முந்தி மாதிரி ஓடி வந்து என்ன மோந்துக் கொள்ளல்ல. எனக்கு சரியான துக்கம். கௌணத் தடியில இருந்து உம்மம்மா வந்தா... அவவும் சிரிச்சா. என்ன மோந்துக் கொள்ள வரல்ல.



WEB : http\\www.thamizham.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு அழுகையே வந்திடும் போல இரிக்கி. கண்ணெல்லாம் கலங்கிட்டு. மெல்ல மெல்ல ஊட்டுக்குள்ள போனன்... உடுப்ப மாத்தினன், ஆசையாக் குக்டுகக் கொந்த தயிரும், அவலும் பேக்குக்குள்ளேயே இருந்தது......

மத்த அறைக்குப் போனேன்... தாத்தா வுக்கு கட்டில்ல தூக்கம் போனது. 'தாத்தா... தாத்தா...' என எழுப்பினேன்... முழிச்சிப் பாத்தா... தூக்கக் கலக்கம், 'வாப்பாவுமா வந்த...?' எனக்கு அடக்கி வெச்சிருந்த அழுக அப்படியே வந்திட்டு. என்னபத்தி ஒண்டுமே கேக்கல்ல... என்னோட தாத்தா எவ்வளவு எரக்கம்... இப்ப மட்டும் வாப்பாவுமா வந்த எண்டு கேக்கிறா எனக்கு அழுக வராதா...?

'இஞ்ச சரியான பிரச்சின... ஜௌபரை யும், மஜித்தையும் சுட்டுட்டானுகள்... இன் னும் பன்னெண்டு பேர் சுடுறதுக்கு இருக் காம்... பெரிய பெரிய ஆம்பிளைங்க ஒத்தரும் இப்ப அளுப்பொத்தையில இல்ல. ஊரே சரி யான மாதிரி பயந்து போயிரிக்கி. நாங்க எல் லாரும் ராவக்கி றஹீம் மாஸ்டர்ட வீட்டில தான் தங்கி இருக்கிற... சின்ன ஊடு, ஒரய ஆமிக்காரன் வாறான்... அஞ்சி மணிக்கு எல் லாம் சோறு திண்டுட்டு ஆறு மணிக்கெல்லாம் படுத்திடுவோம்!' சாச்சி பேசுவது வெளியே கேட்டது. நானும் வெளிய வந்தன்......

'அது சரி ஏன் ஜௌபரையும், மஜீதையும் சூட்பண்ணின... அவங்க என்ன குத்......'

'அத எல்லாம் இப்ப இஞ்ச கதைக்க வாணா... மகன கூட்டிக்கொண்டு நாளைக்கே ஊருக்குப் போயிடுங்க... என்ல கோவிச்சா லும் குத்தமில்ல... ஊரு ஆம்பிளை ஒத்தரும் இப்ப இஞ்ச இல்ல......'

வாப்பாவ கதைக்க உடாம உம்மம்மா சொன்னா. எனக்கெண்டா அழுக தான் வந் திட்டு. நாளைக்கே சம்மாந்துறைக்குப் போகட் டாம்... ஒரு கெழம மட்டுக்கு சந்தோஷமா இரிக்க வந்த...நாளைக்கே போகச்சொன்னா...

'எனக்கேலா... எனக்கேலா நான் போகு மாட்டன்... நான் அடுத்த கெழம தான் போவன்......'

'ஒனக்கென்ன பைத்தியமா... ஒரே குண்டு வெடிக்குது...கண் மண் தெரியாம சுடுறாங்க... ஒரொரு நாளும் ரோட்டல பத்துப் பதினஞ்சி பேரப் போட்டு பத்தவெக்கிறானுகள்...ஊரே அமர்க்களப் பட்டுக்கிட்டிருக்கு... ஒத்தனொத் தனும் ஒரொரு பேரில மனிசன நாய் மாதிரி கொல்றானுகள்... அவ அடுத்த கெழம போப் போறாவாம்...' உம்மம்மா சத்தம் போட்டு எனக்கு ஏசினா... அவ எனக்கு ஏசினதே இல்ல... எண்ட கண்ணால தண்ணி கொட்டி னது... ஓடிப்போய் கட்டிலில் படுத்துக் கொண்டேன்......

சாச்சிவந்து கண்ணத்தொடச்சிவிட்டா...

'நீங்க நல்ல புள்ளதானே... ஏண்ட றிஸானா குட்டிதானே... இப்ப முந்தி மாதிரி இல்ல... நீங்க நாளைக்கே போங்க. நாட்டில சமாதானம் வரட்டும்... அதுக்குப் பொறகு வந்து மாசக்கணக்கில நில்லுங்க... சரியா... ஏண்ட மகள்......'

'ஒரே சமாதானம்...... சமாதானம்...... சமாதானம்...... எல்லாரும் இதத்தான் சொல் றாங்க... எனக்கு என்ன எண்டு ஒண்டும் வௌங்குதில்ல... என்ன சாச்சி சமாதானம் எண்டா......'

'மகள் சமாதானம் எண்டா...'

'டும்... டும்...'

ரெண்டு வொம்ஸ்கள் மிச்சம் சத்தமா மிச்சம் கிட்ட வெடிச்சது. காது அடச்சிப் பெய்த்து... ஊடே உசிம்பிட்டு... தகரத்தில வந்து உழுந்த மாதிரி இருந்தது. சாச்சி... உம்மம்மா... வாப்பா... தாத்தா... ஒத்தரும் ஒண்டும் பேசல்ல... எலிக்கொப்டர் ஒண்டு பிசாசி கொரோடுற (கத்துகிற) மாதிரி கொரோட்டுக் கொண்டு போனது... எனக்கு சரியான மாதிரிக்கும் பயம் வந்தது......

'சாச்சி நான் நாளைக்கே சம்மாந்து றைக்குப் போப்போறன்......'

☐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தி வேளை

இன்றைய நாட்களில் என்னவோ என்னிலிருந்து
குறைந்து கொண்டு போவதைக் காண்கிறேன்
பெண்களின் கலகலப்பில்
சிரிப்பின் அழகில்
நளினத்தின் அழகில்
நாணத்தின் அழகில்
புலன்களைச் செலுத்துவதில் இருந்து வந்த விருப்பம்.

பழைய சம்பவங்களைக் கிளறிவிட்டு
9 02. 90 வெள்ளி மாலைக்குள்
சாலை மணலுக்குள் செருப்பையும் மீறி
புதையுண்டு போகும் அவள் பாதங்கள்.
நடையில் சாந்தமில்லாத வேகமுமாய்
முன் பின் புறங்கள் சிறுமியரின் காவலுமாய்
அவள் - வந்த பாதையை மாற்றிப் போகையில்
என்னை மனம் முழுவதும் நிறைத்திருப்பாள்.
ஒரே கருப்பையில் தரிக்காத சகோதரியாய்......
நீண்ட நாட்களின் பின்னும்
ஒரு முடிவுக்கும் அவள் வரவில்லை என்பதை
அவள் - மறைவதில் இருந்த அக்கறை சொன்னது.

பலம் பெற்ற பெண்மையை அவளுக்கே உரியதாக்கியது.
இதயத்தை நோண்டி குப்பைக்குள் வீசிய வேகம்
பக்கத்து மரத்திலாவது தாவிக் கொள்ள சுதந்திரம் இல்லையா?
காக்கை விரட்டிய குயில் குஞ்சுக்கு.

சலனங்களை சகித்துக் கொள்ள முடியாத
மென்மை இதயத்துடன் வாழ்பவன் நான்.
வெள்ளிக் குறிப்பினை
நண்பர்களிடம் கதைத்துத் தீர்ப்பதிலும் அர்த்தமில்லை.
ஓடிப் போய்
அவள் காதல் கடிதங்களைப் புரட்டுவதிலும் அர்த்தமில்லை.
அவள் உருவத்தைப் புதைத்திருக்கும் இதயத்திலும் அர்த்தமில்லை.
எதிலும் அர்த்தமில்லை என்பதை உணரவே செய்தேன்.

பழைய நண்பர்களின் மனங்களின் மாதிரியையும்
அந்த ஒரு சில வினாடிக்குள்
என் பெரு மூச்சு உசுப்பிக் கொண்டு போனது.
எத்தனையோ வகையான கேள்விகளும்
என் தலைக்குள்
விடை இல்லாமல் தேங்கிக் கிடப்பதைக் காண்கிறேன்.

- டீன்கபூர் -

□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் கவிமணி சி. வி. யின் வாழ்வும் பணியும்

**- அந்தனி ஜீவா -**

மலையக இலக்கிய முன்னோடிகளில் ஒருவரும், மலையக மக்கள் கவிமணி எனப் பாராட்டி கௌரவிக்கப்பட்டவருமான அமரர் சி. வி. வேலுப்பிள்ளை அவர்களை ஒரு கவிஞராகவும், தொழிற் சங்கவாதியாகவும் பலர் அறிந்து வைத்துள்ளனர்.

மக்கள் கவிமணி சி. வி. ஒரு கவிஞர், எழுத்தாளர், தொழிற் சங்கவாதி, தலவாக்கொல்லை பாராளுமன்ற உறுப்பினராகவும் திகழ்ந்தவர். இத்தனைக்கும் மேலாக மக்களை நேசித்த மனிதாபிமானியாக; மானுடம் பாடிய வானம்பாடியாக திகழ்ந்தவர்.

மக்கள் கவிமணியாக சி. வி. வேலுப்பிள்ளை தன் வாழ்நாள் முழுவதும், மரணம் அவரை அரவணைத்துக் கொள்ளும் வரை ஒரு முழுநேரத் தொழிற்சங்கவாதியாகப் பணியாற்றிக் கொண்டு சலசலப்பில்லாமல் தன் இலக்கியப் பணியை ஒரு ஞானத்தவம் போல இயற்றி வந்தவர். இளமைக்காலம் முதல் அமரராகும் வரை அவரது வாழ்வும் எழுத்தும் இரண்டறக்கலந்தே வந்துள்ளது.

1930 களுக்குப் பின் மலையகத்தில் ஒரு மாற்றம் ஏற்படத் தொடங்கியது. 1940 களுக்குப் பின் அந்த மாற்றத்தில் ஒரு வேகம் ஏற்படத் தொடங்கியது. இதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் சி. வி.

தமிழகத்தில் 'மணிக்கொடி' சகாப்தம் உதயமாயிற்று. அது மலையகத்தையும் எட்டிப் பார்க்கத் தவறவில்லை. ஈழத்து இலக்கிய உலகில் இந்த மணிக்கொடி ஒரு மறுமலர்ச்சி குழுவை உருவாக்கியதைப் போல, மலையகத்தில் ஒரு கோஷ்டி உருவாகாவிட்டாலும் சி. வி. போன்றவர்கள் தனிநபர்களாக செயல் பட்டுள்ளதை வரலாறு சுட்டிக்காட்டுகின்றது.

மலையக இலக்கிய வளர்ச்சிக்கு சி. விக்கு முன்னர் ஒரு சிலர் உந்து சக்திகளாக இருந்தாலும் சி. வி. ஆரம்பமுதல் தனது எழுதுங்கை சக்தி இழக்கும் வரை மலையகத்தை நேசித்தது மாத்திரமன்றி அதன் வளர்ச்சியில் பெரிதும் அக்கறைகாட்டி வந்தார். அன்னார் வாழ்வும் எழுத்தும் இரண்டறக் கலந்திருந்தது. அவருடன் இரு தசாப்தங்களாக மிக நெருங்கிப் பழகியவன் என்ற வகையில் அவருடைய இலக்கியப் பங்களிப்பை இன்றைய இளைய தலைமுறையினருக்குக் கோடிட்டுக் காட்டவே இக் கட்டுரையை எழுதலானேன்.

மலையக மக்களிடையே ஓர் எழுச்சிக்கு வித்திட்ட பெருமை இலங்கையின் முதல் தமிழ் தினசரியின் ஆசிரியரான சோ. நடேசய்யரைத்தான் சாரும். தென்னிந்திய பிராமணரான சோ. நடேசய்யர் பத்திரிகை ஒன்றில் பணியாற்றி அப்பத்திரிகைக்கு சந்தா திரட்ட 1919ம் ஆண்டு இலங்கை வந்தார். மீண்டும் 1920ம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கை வந்து 'தேசநேசன்' என்ற தமிழ் தினசரியின் ஆசிரியரானார். 1925ம் ஆண்டு முதல் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நலனிலும் நடவடிக்கைகளிலும் அக்கறை காட்டினார்.

(இவர் மலையகப் பகுதிகளுக்குச் சென்று தோட்டம் தோட்டமாக சஞ்சரித்து மகாகவி பாரதியாரின் தேசிய உணர்வைத் தூண்டும் பாடல்களை தன் மனைவியாரின் இனியகுரல் மூலம் பாடவைத்து,) அவர்களிடையே ஒற்றுமையுணர்வூட்டும் பிரசங்கங்களைச் செய்தார். அத்துடன் பாரதியாரின் பாடல்களை துண்டுப் பிரசுரங்களாக அச்சிட்டுப் பரப்பினார்.

1940 களுக்குப் பின் மலைநாட்டில் கல்வி எல்லோருக்கும் உரித்தாயிற்று. கல்வியின் காரணமாக மலையகத்தில் மாற்றமும் மறுமலர்ச்சியும் ஏற்பட்டது. மகாகவி பாரதி, தாகூர், சரோஜினி தேவி ஆகியோரின் கவிதா சக்தியால் கவரப்பட்டு சி. வி. கவிதையின் மூலம் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தினார். நடேசய்யர் பணிகளும் அவருக்கு உந்து சக்தியாக அமைந்தது.

மக்கள் கவிமணி சி. வி. வட்டக்கொட அருகிலுள்ள மடக்கும்புர தேயிலைத் தோட்டத்தில் 1914ம் ஆண்டு செப்டம்பர் 14ம் திகதி பிறந்தார். ஆரம்பத்தில் அவர் தோட்டப் பாடசாலையில் கல்வி கற்று பின்னர் அவர் அட்டனிலும் நுவரெலியாவிலும் கொழும்பு நாலாந்தாக் கல்லூரியிலும் கல்வி கற்றார்.

அட்டன் மிஷனரி பாடசாலையில் கல்வி கற்கும் பொழுது அதிபராக இருந்த ஸ்டீபன் ஜோசப் ஒரு எழுத்தாளர். இயற்கையிலேயே சி. விக்கு இருந்த எழுத்தாற்றலைக் கண்டு ஊக்குவித்தவர் அவர். சி. வி நாலாந்தாக் கல்லூரியில் கல்வி கற்கும் பொழுது (பாரத கவியரசர் தாகூர் இலங்கைக்கு வருகை தந்தார். அப்பொழுது தனது முதல் கவிதை நாடகமான 'விஸ்வ மாஜினி'யை அச்சிட்டு அவரிடம் கொடுத்து ஆசி பெற்றார்.)

கல்லூரிப் படிப்பை முடித்து வெளியேறிய இளைஞரான சி. வி. யின் நினைவில் மலையக மக்களைப் பற்றிய சிந்தனை எழுந்தது. இந்த சமூகம் இப்படி ஒதுக்கப்படுவதற்கு என்ன காரணம் என சிந்தித்தார். இந்தச் சமூகத்தில் ஒரு மாற்றமும் மறுமலர்ச்சியும் ஏற்பட வேண்டுமானால் கல்விதான் அதற்கு தகுந்த ஆயுதம் எனக் கண்டார். 1935ம் ஆண்டில் கவியரசர் தாகூரின் பெயரில் பூண்டுலோயாவில் கல்விக் கூடம் ஒன்றை அமைத்தார். பின்னர் தனது பிறந்த ஊரான வட்டக்கொடையில் மகாகவி பாரதியின் பெயரில் பாரதி இளைஞர் சங்கம் ஒன்றை அமைத்தார். சில காலத்திற்குப் பின்னர் பொருளாதார நெருக்கடி காரணமாக நுவரெலியாவிலுள்ள காமினி வித்தியாலயத்தில் ஓர் ஆங்கில ஆசிரியராக பணியாற்றினார்.

ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் இளமையின் கோலத்தால் காதல் கவிதைகளை நிறைய எழுதினார். அதனைத் தன் நெஞ்சுக்கு நெருக்கமான நண்பரான ஸ்டேசன் மாஸ்டரிடம் காட்டிய பொழுது, அவர் அந்த எழுத்துக்களை படித்துவிட்டு சொன்ன கருத்துக்கள் காரணமாக 'தனது எழுத்துக்கள் தான் வாழ்கின்ற சமூகத்திற்குப் பயன்பட வேண்டும்' என்று காதல் கவிதைகளை கிழித்து எறிந்து விட்டு தனது மக்கள்படும் துன்ப துயரங்களை எழுத ஆர்வம் கொண்டார்.

சி. வி. தனது சமூகம் ஒடுக்கப்படும் நிலை கண்டு, அவர்களின் பிரச்சினைகளில் ஒரு பார்வையாளனாக இருக்காமல் அதில் பங்காளியாக வேண்டும் என்ற எண்ணத்தில் 1947ல் மலையக மக்களின் தலவாக்கொல்லை பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் இலங்கை இந்தியன் காங்கிரஸின் செயலாளராகவும் பணியாற்றினார். இதுவே பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக மாற்றப்பட்டது. 19 5ம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸை விட்டு வெளியேறி வி. கே. வெள்ளையனுடன் இணைந்து தொழிலாளர் தேசிய சங்கத்தை ஸ்தாபித்தார். இதன் நிர்வாகச் செயலாளராக 1984ம் ஆண்டு நவம்பர் 16ம் திகதி தனது இறுதி மூச்சு விடும் வரை பணியாற்றினார்.

'புழுதிப் படுக்கையில்
புதைந்த உன் மக்களை
போற்றும் இரங்கற்
புகழ் மொழி இல்லை
பழுதிலா அவர்க்கோர்
கல்லறை இல்லை
பரிந்தவர் நினைவு நாள்
பகருவாரில்லை'

(இவ்வாறு தான் வாழ்ந்த சமுதாயமான மலையக மக்களைப்பற்றிய சோகப் பெருமூச்சுகளையும் வாழ்வின் அவலங்களையும் எடுத்துக்கூறும் '<u>இலங்கையின் தேயிலைத் தோட்டத்திலே</u>' என்ற கவிதைப் படைப்புதான். இதனை ஆங்கிலத்தில் எழுதியதால் தனது மக்களைப் பற்றிய துயரங்களை உலகறியச் செய்தார். மற்றும் இந்த மக்களைப் பற்றி '<u>உழைக்கப் பிறந்தவர்கள்</u>' என்ற நடைச்சித்திரங்களை ஆங்கிலத்தில் எழுதினார். இது மாத்திரமல்ல, தினகரன், வீரகேசரி ஆகிய தேசிய பத்திரிகையில் '<u>வாழ்வற்ற வாழ்வு</u>'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எல்லைப்புறம்', 'பார்வதி', 'வீடற்றவன்', 'இனி படமாட்டேன்' ஆகிய நாவல்களை தொடராக எழுதினார். கடைசி மூன்று நாவல்களும் இவரால் தமிழில் எழுதப்பட்டவை.)

சி. வி. இறுதியாக எழுதிய நாவல் 'இனிப் படமாட்டேன்' இந்நாவலின் முன்னுரையில் தமிழகத்து இலக்கிய விமர்சகரான திரு. சிதம்பர ரகுநாதன் 'அவரது கதைகளில் நாம் உண்மையான வாழ்க்கையை காணமுடிகிறது. நறுக்குத் தெறித்தாற் போன்று சுருக்கமான வாக்கியங்களில் சற்றேனும் உணர்ச்சிப் பெருக்கு உள்ளாகாமல் உள்ளதை உள்ளவாறு கூறும் உத்தி அவரது கதைகளில் அலாதியான சிறப்பாகும்.' என்கிறார்.)

மலையக நாட்டார் பாடல்களில் சி. விக்கு பெரு விருப்பு. நாட்டார் பாடல்களை வரலாற்று ரீதியாக ஆராய வேண்டும்; அப்படி ஆராய்ந்தால் வரலாற்றுத் தகவல்களை தெரிந்து கொள்ளலாம். மலையக நாட்டுப் பாடல்களைத் திரட்டி 'மலை நாட்டு மக்கள் பாடல்கள்' என்ற தலைப்பில் நூலாகத் தந்துள்ளார்.

இந்த நாட்டுப் பாடல்கள் தொகுதியில் மலையகத்திற்கு உழைப்பதற்காக ஆட் கூட்டி வந்த வரலாற்றை, கண்டி சீமைக்கு ஆட்கூட்டி வந்த பொழுது பிறந்த பாடல்கள் கூறுகிறது. ஒப்பாரிப் பாடல்கள், வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களை பிரதிபலிக்கும் காதல் பாடல் முதற் கொண்டு கடவுள் வழிப்பாடு வரை பல்வேறு வகைப் பாடல்கள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன.

'பாலைவனத்தின் மலைப்பிராந்தியத்தின் கனிச் சுரங்கங்களிலிருந்து, எனது தேச மக்கள் படும் துன்பங்களை ஏற்று, சுரங்கச் செல்வங்களை சேகரித்து வருகிறார்கள். எங்களுடைய தேசத்தின் மக்களைப் போல் உலகின் எந்தப் பகுதி மக்களும் கொடுமைக்கு உள்ளாக்கப் பட்டதாகக் கேள்விப்பட்டதேயில்லை.' என அவர்களுக்காக புரட்சி கீதம் இசைத்தான் சிலி நாட்டுக் கவிஞன் பாப்லோ நெருடா. அதைப் போலவே தோட்டத் தொழிலாளர்களுக்கே பாடினார் சி. வி.

மக்கள் கவிமணி சி. வி., பேனாவை ஆயுதமாகக் கொண்டு மலையக மக்களின் துன்பங்களை தம் வாழ்வோடு இணைத்துக் கொண்டு எழுதினார். அதனால்தான் அவர் மலையக மக்கள் கவிமணியாக விளங்குகிறார்.

□

## கண்ணீரைக் காணவில்லை!

வற்றிப் போன விழிநீரைத்தேடி....
நான் வீதியெங்கும் அலைகிறேன்!

நமுத்துப் போன நினைவுகளில்
நாடித் துடிப்புகள் நர்த்தனம் புரிகையிலே
கானல் நீரை
என் விழிகள் கக்கிக் கொள்கின்றன.

சூரிய ஒளியிலே தெரிகின்ற
நிறங்கள் மாதிரி,
நேற்றைய பொழுதுகள்
எனக்குள் மௌன அஞ்சலி செய்வதால்
எதிர்காலச் சுமைகளுக்கு
ஒரு சுமைதாங்கியாய்த் தேம்பி நிற்கிறேன்!

இதய சாம்ராஜ்ஜியத்தில் சுய ஆட்சி தேடும்
ஆசைகளின் உந்தல் ஒரு புறம்...
இலட்சியக் காற்றின் சுகந்தத்தைக் காண
கடமைத் தலைவன் காதலை மறுக்கும்
ஏக்கம் மறு புறமுமாய்...
இந்த சமுதாயச் சாக்கடையில் உறைந்து
வாழ்க்கையில் திசைமாறிப் போன
உணர்வுப் பறவைக்கு
இரத்த தானம் வழங்குதற்காய்...
இங்கே,
ஒரு விழியின் விசும்பல்
எனக்குள் இன்னும்தான் ஒலிக்கிறது!
ஆனால்......
நீரை மட்டும் இன்னும் காணவில்லை!

- சபீனா அபூபக்கர் -

□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைப் பிரசவம்

அவனுக்கு எதையாவது எழுத வேண்டும் போலிருந்தது. எப்படியாவது எழுத்துலகில் தன் முத்திரையைப் பதித்துவிட வேண்டும் என்ற வைராக்கியம் அவனுக்கு உண்டாயிற்று. அது ஒரு உக்கிரமான உத்வேகத்துடன் அவனை உந்துவதாகவே அவன் உணர்ந்தான்.

இன்று காலை பாடசாலைக்குப் புறப்படும் போது அந்தக் கடிதத்தை அவன் நண்பன் கொடுத்ததிலிருந்து அவன் நிலை கொள்ளாமல் தவித்தான். ஒரு பிரபல்யமான பத்திரிகைக் காரியாலயத்திலிருந்து அக்கடிதம் வந்திருந்தது. அவன் எழுதியனுப்பிய சிறுகதை திருப்பியனுப்பப்பட்டிருந்தது. ஒரு குறைப் பிரசவத்தின் வேதனை உள்ளமெங்கும் வியாபிக்க அவன் பிரார்த்தனையறைக்குள் சென்றான்.

தான் எழுதியனுப்பிய சிறுகதை முதல் தடவையே வெளிவந்துவிடும் என்று அவன் அப்படியொன்றும் பெரிதாக எதிர்பார்க்கவில்லைதான் என்றாலும் இந்தத் தோல்வியை அவனால் தாங்கிக் கொள்ள முடியாமலிருந்தது. தன்னுடைய வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை, புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தப் போகின்ற எழுத்துலகப் பிரவேசத்தை எண்ணியிருந்த இவனுக்கு இந்நிகழ்ச்சியின் தாக்கம் பெரியதாகவே இருந்தது. தன்னுடைய கதையை இன்னொருவர் அங்கீகரித்து அது பத்திரிகையில் வெளிவந்து பலராலும் விமர்சிக்கப்படுவதற்கும் அதனால் தனது வாழ்க்கையில் ஏற்படப்போகின்ற மாற்றத்திற்கும் என்ன சம்பந்தமென இவன் எண்ணிப் பார்க்கிறான்.

உண்மையில் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத ஆனால், ஏதோவொரு வகையில் தொடர்புள்ள நிகழ்ச்சிகளின் தொகுப்பே வாழ்க்கையாக விரிவு கொள்வதாக இவன் உணர்கிறான். தன் வாழ்க்கையின் மாற்றத்திற்கு எழுத்துலகைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் என்ன? என்ற இவன் ஆராய்ச்சி வெவ்வேறு முடிவுகளை சித்தாந்தங்களை இவனுள் தோற்றுவிக்கிறது.

முழுமையற்ற மூளியான வாழ்க்கையே ஒரு கலைஞனைத் தோற்றுவிக்கிறது. அந்த முழுமையற்ற நன்மை புறவுலகைச் சார்ந்த வெளிக்காரணிகளாகவோ, அல்லது தன்னுளவில் அமைந்த அகக் காரணிகளாகவோ அமையலாம்.

படித்துப் பட்டம் பெற்று வசதியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் வாய்ப்பையிழந்தவன் வேறுவகையில் அதனை ஈடு செய்ய எண்ணி முனையும் போது அவன் கலைஞனாகிறான். உடலளவில் ஊனமாகவோ அல்லது பணத்தளவில் மெலிதான பாதிப்பிற்குள்ளாகி அதை இனங்கண்டு கொள்ளவும் முடியாத நிலையிலோ மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் செயலிலும் ஒரு கலைஞன் உருவாகிறான்.

இந்தச் சித்தாந்தங்களில் தன்னைப் பொருத்திப்பார்த்துக் காரணங்களை அறிந்து கொண்டபோது அவனால் வெட்கப்படாமலிருக்க முடியவில்லை. கூடவும் வேதனைப்படவும் செய்தான்.

'துள்ளித்திரிந்த போது என் துடுக்கடக்கி பள்ளிக்கு அனுப்பி வைக்கவில்லையே, தந்தையாகிய பாதகனே' என்ற வரிகளை எண்ணி அவன் மானசீகமாக தந்தையிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். இவ்வரிகளைச் சொல்லி என்னை வசைபாடும்படி வாழாமலிருந்தால் சரிதான் என்ற அவருடைய தீர்க்க தரிசனம் ஒரு நிறைவான வேத வாக்கியமாக மனமெங்கும் வியாபகம் கொள்ள, கண்களில் பனித்த துளிகளை கைகளால் நீவி விட்டான்.

அவனுக்கு மேற்கொண்டு எதையும் எழுத வேண்டும் போல் தோன்றவில்லை. எல்லாமே எப்பவோ நடந்து முடிந்தவை போல் உணர்ந்தான். எழுதுவதை நிறுத்திவிட்டு நிமிர்ந்து சாளரம் வழியாகப் பார்த்தான். வானம் நீலமாக நிர்மலமாயிருந்தது.

செயலற்ற நிலையே நிறைவுற்ற செயலாகிறது என்பதை நிதர்சனமாய் அவன் உணர்ந்தான்.

**- பாரதி மலர்வண்ணன் -**

☐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்திகள்

- எம். ஏ. றஹ்மத் -

உன் சத்தியங்களில்
சாத்தியங்களைப் பகுத்துப் பார்க்கிறேன்
சூத்திரத்தில் - நம்
காதல் சூத்திரத்தில்
தவறுகள் உண்டுமோ?
சாத்தியங்களில்
சடைவைத்தான் நான் காண்கின்றேன்.

என் விரல் இடுக்குகளில்
உன் வாடை இன்னும் மாறவில்லை
பச்சயத்துக்காய்
சூரிய ஒளியைப் போல் - என்
இதய இடுக்குகள்
உன் உஷ்ணத்தை எதிர் பார்த்திருந்தன.

உன்னை நான்
பாரியாகவே கண்டேன்
உன்னளவில் - நீ
வெறும் சாதாரண மனிதன் தான்.

அர்ச்சனைக் கேற்றப்பட்டேன்
மூன்றாவது ஒருவனால்
உன் விரல்கள்தான் அதனைக்
கையேற்கும் என்று
நம்பியிருந்தேன் - ஆனால்
நீயோ......

☐

## ஊனங்கள்

- எஸ். எச். வஜீனா ராணி -

உள்ளத்தில் ஊனமுற்றிருக்கும் மானிடனே
உமக்கேன் விறாப்புப் பேச்சுக்கள்
உடல் ஊனம் கணக்கெடுக்க - நீ
உந்துகின்ற வேளையிலே
உன் உள ஊனம் கணக்கெடுக்க - நீ
உருக்கமாய் மறுக்கின்றாயே

அங்கங்கள் இல்லாவிடில்
அவன் மனிதனல்ல என
அமங்கள முடிவெடுக்கும்
அழுக்குடையவனே நீ உன்
அகப் புறத்தை உற்று நோக்கு

அழுக்கு படிந்து கிடக்கும் உன்
அகப்புற ஊனமதை
அழகாய் மறைத்திடுவாய் - ஏன்
மாற்றான் உடல் ஊனமதை
மறைக்க மறுக்கின்றாய்

இதுதான் உன் இவ்வுலக நீதியோ
இங்கு நீ ஆடும் நாடகம் இதுதானோ.

☐

## சவக்குளிகள்

- றஹ்மான் - ஏ - ஜெமீல் -

இங்கு -
ஒரு
பொழுதினில்
எண்ணற்ற
உயிர்களுக்கு
எமன்
சவக்குழி
வெட்டுகின்றான்.

கடல்
பொங்கியெழுந்து
ஊரை
விழுங்கியும்
பூகம்பத்தால்
பூமி வெடிப்புகள்
கொண்டும்.

☐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ப்ளூ சாரி'

"என்னங்க...நான் சொன்னது உங்களுக்கு ஞாபகமிருக்கா? அதான்; இந்தப் பெருநாளைக்கு நல்ல நல்ல சாரியெல்லாம் வந்திருக்காம் எங்க தாத்தாவுக்குக்கூட பச்சக் கலரில ஒரு சாரி வாங்கிருக்காங்க. நான் நேற்றுப் பார்த்தேன். மிகவும் நல்லாயிருந்திச்சு. அதே கலர் நமக்கு வேணாம். ப்ளூக் கலர் வாங்கினா ரெம்ப நல்லாயிருக்கும். என்னங்க!... நான் பேசிக்கிட்டேயிருக்கேன் நீங்க முகத்த ம்... என்று வச்சிக்கிட்டிருந்தா எப்படி?"

தூக்கத்தை விட்டு எழுந்திருப்பதற்கு முன்னமே தனது தேவையை விண்ணப்பித்துக் கொண்டாள் சாஜீதா. எவ்வித பதிலும் சொல்லாமல் படுக்கையை விட்டு எழுந்து சென்றான் நிஸாம். சாஜீதாவும் எழுந்து சென்று தேனீர் தயாரித்தாள். கால் மணியாகியும் வெளியில் சென்றவன் வீட்டிற்குள்ளே வராததினால் வெளியே வந்தாள் சாஜீதா. நிஸாம் கிணற்றில் சாய்ந்த வண்ணம் எதையோ யோசித்துக் கொண்டு நின்றான். குடத்தை எடுத்துக் கொண்டு தண்ணீர் எடுப்பதைப் போல் அவன் நிற்குமிடம் வந்தாள். அவள் வரும் அவரம் கேட்டு திரும்பி அவளைப் பார்த்து விட்டு மீண்டும் தனது பார்வையை பூமிக்குச் செலுத்தினான்.

"இதப்பாருங்க... தேனீர் போட்டு ரெம்ப நேரமாச்சு. சூடாறிப் போகும் சீக்கிரம் வந்து குடியுங்க!"

அவள் சொல்லிவிட்டு நகர்ந்தாள். தனது காலைக் கடமைகளை முடித்து விட்டு உள்ளே சென்றவன் தேனீரைக் குடித்து விட்டு அவசர அவசரமாக வெளியேறினான். அவனோடு ஒரே இடத்தில் வேலை செய்கின்றவர்கள் வீதியில் வந்து கொண்டிருந்தனர். அவனும் அவர்களோடு வேலைக்குச் சென்றான். அவன் ஒரு நெசவுத் தொழிலாளி. கிராமங்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு கிராமமும் தனக்கென்றொரு கைத்தொழிலை வைத்துக் கொள்ளும். அதேபோல்; அவனது கிராமம் நெசவுத் தொழிலை வைத்துக் கொண்டிருந்தது. நெசவுத் தொழிலினாலே தலை நிமிர்ந்து நின்றது அவனது கிராமம். வேலை செய்து கொண்டிருக்கும் போது அவனது மனைவி சாஜீதா சாரி வாங்கிக் கேட்டது ஞாபகம் வந்தது. அவனுக்கு பட்டுமென்ன வாங்கிக் கொடுக்கக் கூடாதென்று எண்ணமா? அப்படியொன்றுமில்லையே! ஒவ்வொரு கணவனும் தன் மனைவி கேட்பதெல்லாம் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கத்தானே செய்யும். ஆனால், நிலமை முடியாமல் போகும் என்ன செய்யிறது.

பகல் சாப்பாட்டிற்கு எல்லாரும் வீட்டிற்குப் போய் விட்டார்கள். இரண்டு மணியாகியும் அவன் வீட்டிற்குப் போகும் எண்ணமில்லாமல் வேலை செய்து கொண்டேயிருந்தான். பெருநாளைக்கு இன்னும் பதினைந்து நாட்கள் மட்டுமே இருந்தன.

வேலைக்குப் போன தன் கணவன் பகல் சாப்பாட்டிற்கு வரவில்லையே ஏன்...? என மனதில் நினைத்துக் கொண்டவளாய் வீட்டை விட்டு வெளியே வாசலுக்கு வந்தாள் சாஜீதா. நிஸாம் வரவில்லை. அதற்குப் பதிலாக புடவை வியாபாரியே அவ் வழியே வந்து கொண்டிருந்தான். சாஜீதா, கூறி விற்பனை செய்பவரிடம் சாரி வாங்குவதைப் போல் கனவில்கூடக் கண்டிருக்கின்றாள். அவனைக் கண்டதும் ப்ளூ சாரியின் நினைவுதான் அவளுக்கு வந்தது. உடனே அவனை வரும்படி சைகை காட்டினாள். அவனும் வருவதாக சைகை காட்டும் போது இடையில் யாரோ அவனை நிறுத்தி வீட்டினுள்ளே அழைத்துச் சென்றனர். சாஜீதாவுக்கு ஆத்திரமாக வந்தது. எங்கே நல்ல சாரிகளை அவர்கள் எடுத்து விடுவார்களோ என்ற அங்கலாய்ப்பு ஏற்பட்டது. அவன் வெளியே வரும் வரை இவளும் சுடும் மணலில் காத்துக் கொண்டிருந்தாள். தெரிந்தவர்கள்; பக்கத்து வீட்டுக்காரர்கள், என்ன நிற்கின்றீர்கள் என்று விசாரித்த போது அவள் அவர்களிடம்,

"இல்ல... வேலைக்குப் போனவங்க சாப்பாட்டிற்கு இன்னும் வரல்ல... நேரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிடுச்சி. அதான் வாறாங்களா என்று பார்க்கிறேன்.''

என்று சொல்லிச் சமாளித்துக் கொண்டு நின்றாள்.

எப்படியோ அரை மணிநேரம் கழித்து அப்புடவை வியாபாரியும் வெளியே வந்தான். அவன்; அவள் நிற்குமிடம் வந்ததும் அந்த வீட்டுக்காரர் என்ன வாங்கினார்கள் என்று தான் விசாரித்தாள். வியாபாரிக்குத்தானே தெரியும் பெண்களைப் பற்றி. ஏதோ; யாரும் விரும்பாத பொருளைப் பற்றிச் சொல்லி விட்டான். உள்ளே அழைத்துப் போய் என்னென்ன சாரிகள் இருக்கின்றன என விசாரித்துக் கொண்டே சாரி அடுக்குகளைப் பிரித்தாள். அவள் நினைத்ததைப் போல் ப்ளூ சாரி கண்ணில் பட்டது. அச்சாரியில் இருந்த டிசைனும் அவள் மனதைக் கவர்ந்தது. விலையைப் பேசினாள். ஆயிரத்து முந்நூறு ரூபா எனச் சொன்னான். குறைத்துக் கேட்டாள், அவன் குறைப்பதாக இல்லை. சாரியை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் சென்று கபேட்டைத் திறந்து பார்த்தாள்; அங்கே ஐந்நூறு ரூபாய் மட்டும் தானிருந்தது. 'இன்னும் எண்ணூறு ரூபாய் இல்லையே!'. அவளுக்குச் சாரியைக் கொடுப்பதற்கும் மனசில்லை. ஐந்நூறு ரூபாவை எடுத்து வந்து அவனிடம் கொடுத்து மிகுதிப் பணத்திற்கு நாளை வரும்படி சொன்னாள். ஆரம்பத்தில் ஏற்காதவன்; இவ்வளவு விலைக்கு இச் சாரி விற்பனையாகி விட்டதை நினைத்து பணத்தை வாங்கிக் கொண்டு போய் விட்டான். சாரியை எடுத்துக் கொண்டு போய் கண்ணாடியின் முன்னின்று தன் மேனியில் மேலிருந்து கீழாகப் போட்டுப் பார்த்தாள் வாய்க்குள் ஏதோ பாடல் பிறந்தது. நாளை வரமாட்டாதா பெருநாள் என எண்ணிக் கொண்டாள்.

மாலை ஐந்து மணியாகியும் வேலையை விட்டு ஓய்வெடுக்கவில்லை நிஸாம். ஒரே மூச்சாக வேலை செய்து கொண்டேதானிருந்தான். நிஸாருடைய நண்பன் பாஸில் இவனைக் கவனித்திருக்க வேண்டும். நிஸாம் வேலை செய்யுமிடம் வந்து; அனது தோழில் கைவத்து வா போவோம் என அழைத்தான். நிஸாமும் வேலையை நிறுத்திவிட்டு பாஸிலின் பின்னால் நடந்தான். பாஸில் வெள்ளை மணல் பரப்பில் போய் அமர்ந்து கொண்டான். பக்கத்தில் நிஸாமும் அமர்ந்தான். பாஸில் கேட்டான்.

''அப்படி என்ன கஸ்ரமுனக்கு? நானும் பார்த்தேன், பகல் சாப்பாடு கூடச் சாப்பிடாமலேயே வேலை செய்து கொண்டிருக்காயே...! என்ன... ஏதாவது தேவையா?''

''ஆமா... கொஞ்சம் பணம் தேவைப்படுது. ஆனா, அத எப்படி......?''

''இதுக்குப் போய் எதையோ பெரிசாப் பறி கொடுத்தவனைப் போல சாப்பிடக் கூட போகாம யோசிச்சிக்கிட்டிருக்கிறாயே...? பணம் கண்டிப்பாத் தேவைப்படும் தான். அதுவுமில்லாம பெருநாள் கூட வருது; சாரி சாமான் வாங்க வேண்டும், வீட்டுத் தேவை வேற, பணம் தேவைதான். அதுக்காக ஏன் நாம யோசிக்கணும்? முதலாளியிருக்கார் ஒரு தொகையைக் கேட்டு வாங்கிறது. பிறகு வாரம் மாசமெண்டு ஒரு குறிப்பிட்ட தொகையைக் கழிக்கச் சொல்றதுதானே?''

''என்ன... கடனாக வாங்கவா?''

''ஏன்... வாங்கினா என்ன தப்பு? பெரிய பெரிய முதலாளிமாரெல்லாம் கடன் வாங்கித்தான் முதலாளியானாங்க. ஏன்... இப்ப கூட எப்பவோ பட்ட கடன அடைக்காமல் பெரிய முதலாளியாப் பேசித் திரியிறாங்க. அவங்களப் போலென்ன பெரிய லட்சக்கணக்கிலயா வாங்கப் போறோம். விரலுக்குத் தக்கின வீக்கம். ஆயிரம் அல்லது இரண்டாயிரத்தக் கேட்டு வாங்குவோம். நாம கொடுக்கப் போறவங்க தானே. அதக் கொடுக்காமலிருப்பவங்க தான் பெரிய தொகையா கடன் வாங்கு வாங்க. இதப் பாரு நிஸாம், நீ இப்ப முதலாளி வந்தவுடனே நிலமையைச் சொல்லிப் பணம் கடனாகக் கேட்டு வாங்கிறாய். அதோ முதலாளியே வாறார்.''

பாஸில் பேசி முடித்துவிட முதலாளியும் இவர்களிருக்குமிடம் வந்து சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸிலையும் நிஸாமையும் மாறிமாறிப் பார்த்தார். 'ஏதோ கேக்கப் போகிறானுகள் இவன் ஏதோ சொல்லிக் கொடுத்திருப்பான்' என எண்ணிக் கொண்டவராய் என்ன ஏது என்று கேட்டார். கடனாக ஆயிரம் ரூபாய் கேட்டான் நிஸாம். அவனின் நேர்மை; அங்கே நேர்மையாகவிருந்ததினால் ஆயிரம் ரூபாய் உடனே எடுத்துக் கொடுத்தார். ஏதோ ஒரு பெரிய பிரச்சினை முடிந்து விட்டதைப்போல் மனதில் எண்ணிக் கொண்டு முகத்தில் புன்னகை தவழ வீட்டுக்குப் புறப்பட்டான். வீதிகளில் வரும்போது அந்த ஆயிரம் ரூபாவுக்கு எண்ணங்கள் எத்தனையோ வந்தன. அந்த ஆயிரம் ரூபாவில் ஐந்நூறு ரூபாவுக்குச் சாரியும் அடங்கியது. மிகுதிப் பணத்திற்கு எப்படியோ பெருநாள் செலவுகளைக் கவனித்துக் கொள்ளலாமென நினைத்துக் கொண்டே வீட்டோரம் வந்தான். கதவு பூட்டப்பட்ட நிலையிலிருந்தது. சாஜீதாவைக் காணவில்லை. 'மாலை ஆறு மணியாகின்றது எங்கே போயிருப்பா?' என எண்ணியவாறு வாசலிலே உட்கார்ந்துவிட்டான். ஆறரை மணியாகிவிட்டது. தன் சகோதரியின் மகளோடு கையில் ஏதோ பார்ஸலுடன் வீட்டுக்கு வந்தாள் சாஜீதா. வந்தவள் நிஸாமிருக்குமிடம் வந்தாள்.

''நான் இப்பதான் எங்கட தாத்தாவோட வீட்டுக்குப் போனேன். அங்கே போய் உங்களப் பத்தித்தான் பேசிக்கிட்டிருந்தோம். வேலைக்குப் போனநீங்க இன்னும் வரவில்லையென்று. இதப் பார்த்திங்களா, நான் நினைத்த மாதிரியே ப்ளூ சாரி. சைக்கிள்ள கொண்டு வந்து விற்பாங்களே அவங்களுக்கிட்ட வாங்கினது. ஆயிரத்து ஐந்நூறு ரூபா. ஐந்நூறு ரூபா கொடுத்திட்டேன். இன்னும்; ஆயிரம் ரூபாக் கொடுக்க வேணும். நாளைக்கு வரச் சொன்னேன்.''

''நாளைக்குப் பணத்திற்கு வருவான், அப்படித்தானே?... நாளைக்குப் பணம் கேட்டு வாறவனுக்கு எப்படிப் பணம் கொடுப்பது? ஏன்... இப்படி முன்யோசனை இல்லாமல் நடந்துக்கிறீங்க? நம்மளால கொடுக்க முடியுமென்றால் தான் கடனே படவேணும். பேராசையெல்லாம் படவே கூடாது. காசு கிடைக்கெல்லை யென்று வச்சிக்குங்க. நாம நாணயம் இல்லாதவங்களைப் போல தானே யாகிடுவோம் அதக் கொஞ்சமாவது யோசிச்சிங்களா?''

''நான் அப்படி யென்ன யோசிக்காம நடந்திட்டேன்? நான் எப்போதாவது அத வாங்கிக் கொடுங்க இதவாங்கிக் கொடுங்க என்று தொந்தரவு பண்ணினேனா? வருஷத்தில வாற பெருநாள். அதுக்கு இந்தச் சாரியே வாங்கினேன். அதுக்கு இப்படிப் பேசினா! அப்படி யென்றால் நாளைக்கு புடவைக்காரர் வரட்டும், நான் எப்படியோ சமாளிச்சு திருப்பிக் கொடுத்திர்றேன்.''

''ஆமா... திரும்பக் கொடுங்க; நம்ம நாணயத்தப் பத்தி இந்தத் தெருவெல்லாம் அவன் போய்ச் சொல்லட்டும். இந்தாங்க, இதில ஆயிரம் ரூபாய் இருக்கு அவனுக்கிட்டக் கொடுங்க.''

சந்தோஷத்தில் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு பணத்தை வாங்கிக்கொண்டு உள்ளே சென்றாள். வாசலிலிருந்தவன் வானத்தைப் பார்த்தவன் போல் பூமியில் சாய்ந்தான். வானூர்தி மேகத்துக்குள் மறைந்து மறைந்து சென்றது. அந்தச் செய்கை இவனுக்கு முதலாளியிடம் பட்ட கடனை ஞாபகப் படுத்தியது. பெருநாளைக்குள் வாங்கிய ஆயிரம் ரூபாய்ப் பணத்தை எப்படியாவது அடைத்து விட வேண்டுமென்று நினைத்து இரவு பகலாக வேலை செய்தான். பெருநாளைக்கு மூன்று நாட்களிருந்தன. இரவு பகலாய் வேலை செய்ததில் மிகவும் களைத்துப்போய் படுத்த படுக்கையாகி விட்டான். அவனால் எழுந்திருக்கவே முடியவில்லை. கண்களைத் திறப்பதற்குக்கூட அவனுக்குச் சக்தி இல்லாமல் போய் விட்டது. இவன் நிலையைப் பார்த்துத் துடித்துப்போனாள் சாஜீதா. பக்கத்து வீட்டுக்காரப் பையன் ஒருவனை அழைத்து டாக்டரைக் கூட்டி வரும்படி சொன்னாள். பையனும் அரை மணி நேரத்துக்குள் டாக்டரைக் கூட்டி வந்தான். வந்த டாக்டர்; நிஸாமைச் சோதித்துப் பார்த்துவிட்டு உடனே வார்ட்டுக்குக் கொண்டு போகும்படி சொன்னார். ஆனால், சாஜீதா விடவில்லை. அவனை வீட்டில் வைத்துத்தான் வைத்தியம் பார்க்க வேண்டுமென்று ஒரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடியாக நின்றாள். டாக்டர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். அவளும் அதற்கு ஆஸ் பத்திரிகளின் இன்றைய நிலையை எடுத்துச் சொன்னாள். அவள் சொல்வதிலும் நியாய மிருக்கின்றதுதான். இருந்தாலும், வீட்டில் வைத்துக் குணப்படுத்துவ தென்றால் செலவு அதிகமாகும், அதை இவர்களால் எப்படிச் செலவு செய்ய முடியுமென்றே நினைத்தார் டாக்டர். சாஜீதா எதை விற்றாவது நான் செலவைக் கவனிப்பேன் என்று சொன்னாள். சிகிச்சை வீட்டிலேயே ஆரம்பமானது. திரும ணத்தன்று நிஸாம் சாஜீதாவின் கழுத்தில் கட்டிய தாலியை விற்று டாக்டர் சொன்ன மருந்து வகைகளை வாங்கினாள். சேலைன் போத்தல் மட்டும் அவன் உடலுக்குள் ஐந்து பாச்சப் பட்டது. சங்கிலி விற்றும் பணம் பற் றாக் குறையானது. பெருநாளைக்கு வாங்கிய அவளுக்குப் பிடித்த ப்ளூ சாரியை பக்கத்து வீட்டுப் பிள்ளை யொருத்திக்கு ஆயிரத்து நூறு ரூபாவிற்கு விற்று பணப் பற்றாக் குறையை நீக்கினாள். இரண்டு நாள் இடை விடாத சிகிச்சை நடந்தபின் பெருநாள் தினத் தன்று அதிகாலை நாலுமணிக்கு தன் படுக். கையை விட்டு எழுந்திருந்தான் நிஸாம் சாஜீதா அவனின் கால் பாதங்களின் அருகே நித்திரை மயக்கத்தினால் தூங்கித் தூங்கி விழுந்து கொண்டிருந்தாள். அவள் நிலையைப் பாரப்பதற்கு நிஸாமுக்குப் பரிதாபமாயிருந் தது. அவள் கன்னத்தை மெதுவாகத் தடவி னான். இரண்டு தட்டுதலின் பின் விழித்துக் கொண்டாள். அவனை அந்நிலையில் பார்த்த தும் அவளுக்கு ஏற்பட்ட சந்தோஷத்திற்கு அளவே இல்லை. ஆனந்தக் கண்ணீர் பெரு கியது. அவனுக்கு நடந்தவற்றை ஒன்று விடா மல் சொல்லி முடித்தாள். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தவன்,

''இவ்வளவு நடந்திருக்கே; எவ்வளவு பணம் தேவைப்படும். அதற்கு என்ன செய் தீங்க?''

''பணம்... நீங்க சம்பாதிச்சதுதான். எப் படியென்று கேட்கிறீங்களா? நீங்க கல்யாணத் திற்குக் கட்டின சங்கியை விற்றேன், பெரு நாளைக்கு வாங்கித் தந்த சாரிய விற்றேன்.''

''அந்த... ப்ளூ சாரியையா? உங்களுக்கு மிகவும் பிடிச்ச சாரியாச்சே ஏன் வித்தீங்க?''

''ப்ளூ சாரிய விட எனக்கு உங்கள மிகவும் பிடிக்கும். நீங்க நல்ல நிலமையில இருந்தா; ஒரு ப்ளூ சாரிக்கு இரண்டு ப்ளூ சாரி வாங்கித் தராமலா போயிடுவீங்க?''

''நான் உங்கள் என்னமோ என்று நினைச்சேன்!''

''இல்லங்க, ஒவ்வொருத்தருடைய கணவ னையும் நிச்சயமா எப்படிப்பட்ட நிலைமையி லையும் காப்பாத்தியேதான் தீருவாங்க. அது தான் உண்மையான மனைவிக்கு அழகு. நானும் அதேபோல்தான் காப்பாத்திட்டேன்.''

எனக் கண்களுக்குள் வந்த கண்ணீரை கையெடுத்து முந்தானையால் துடைத்துக் கொண்டாள். எப்படிப்பட்ட மனைவியை வாழ்நாளில் நான் பெற்றிருக்கிறேனென பெரு மிதப் பட்டுக் கொண்டு படுக்கையை விட்டெ ழுந்து அவளையும் கைதொட்டு எழுப்பிவிட்டு பெருநாள் தொழுகைக்குப் போகும்படி சொன்னான். அரைமணி நேரத்தின்பின் இரு வரும் பெருநாள் தொழுகைக்குப் போவதற்கு ரெடியானார்கள். அவள்; அவன் திருமணத் திற்குப்பின் வாங்கிக் கொடுத்த பழைய சாரி யைக் கட்டிக் கொண்டு வந்தாள். அவளைப் பார்த்து மௌனமாய் மனசுக்குள் சிரித்தான். அவளுக்கும் அச்சிரிப்பு விளங்கியிருக்க வேண் டும்! அவளும் சிரித்தாள். இருவரும் ஒன்று சேர்ந்து வெளியே வீதிக்கு வந்தார்கள். அவன் ஆசையாய் வாங்கிய அந்த ப்ளூ சாரியை பக் கத்து வீட்டுக்காரப் பிள்ளை பக்குவமாய் உடுத்தி வந்தாள். பார்வை அவளைப்பார்த்து, பின் அச்சாரியைப் பார்த்து, பின் பூமியைப் பார்த்தது சாஜீதாவின் கண்கள். பின் சாஜீ தாவை நிஸாம் பார்க்க இருவரும் சோந்து வீதியைப் பார்த்து நடந்தனர்.

நிச்சயமாக சாஜீதாவின் இந்தப் பொறு மைக்கு அவள் விரும்பியதைப் போல் ப்ளூ சாரிகள் எத்தனையோ கட்டிப்பார்க்கத்தான் போகிறாள்!

ஏ. ஆர். ஏ. வாஹிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org